நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

පුදියපූමි

சுற்று 06 பெப்ரவரி 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 26


## இவர்கள் கூறுகிறார்கள்

☆ இனவாதிகளையும் இனவாதக் கருத்துக்களைப் பரப்புவோரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தண்டிக்க வேண்டும் என அம்பாறை ஹெட்டி முல்லராகுல தேரர் கூறுகிறார்.

☆ வன்னிக்குச் சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய மதத்தலைவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணியின் நடவடிக்கை முழு வேண்டுகோள் விடுத்துள்ளது..

☆ இலங்கைக்கு வெளியே இருந்து பார்த்தால் இலங்கையில் பெரிய பிரச்சினை இருப்பது போல் தெரிகிறது. ஆனால் இங்கு வந்து பார்த்தால் அது ஒரு சிறிய பிரச்சினை என்பது புலப்படும். இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூறி உள்ளார்.

# அரசியல் காடைத்தனத்திற்கு மக்கள் பதிலிறுக்க வேண்டும்.

நாட்டை அழிக்கும் யுத்தத்திற்கு எதிராகவும், தலைவிரித்தாடும் இனவாதத்திற்கு எதிராகவும், ஜனநாயக விரோத நடவடிக்கைகள் காடைத்தனங்கள் என்பவற்றுக்கு எதிராகவும், இந்நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் அணிதிரள்வதை அவதானிக்க முடிகிறது. எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் மக்களின் தீர்ப்பு யுத்தத்திற்கு எதிராகவும், இனவாதத்திற்கு எதிராகவும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகவுமே அமையும்.

மத்திய, ஊவா, சப்பிரகமுவ, மேல், வடமத்திய மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான திகதி அறிவிக்கப்பட்டுவிட்டது. ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அந்நாள் அவர்களின் சமயங்களுக்கு முக்கியமான நாள் என்பதால் அச்சமயத்தவர் வேண்டாம் என்று கேட்டிருந்தனர். பாதுகாப்பு காரணம் காட்டி தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்த அரசாங்கம் ஏனைய இனமத மக்களின் மனசாட்சி சுதந்திரத்தை மதிப்பதாக இல்லை. அதனால் யார் எதிர்த்தாலும் தேர்தலை ஏப்ரல் முதலாம் திகதி நடத்த தீர்மானித்துள்ளது.

வடமேல் மாகாணசபை தேர்தலின் போது செய்த காடைத்தனங்களையும், ஜனநாயக விரோத செயல்களையும் எதிர்காலத்தில் செய்யக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க அவரது கட்சியினரைக் கேட்டுக் கொண்டுள்ளனர். அத்தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியினர் புரிந்த காடைத்தனங்களும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் நன்கு அம்பலமாகியுள்ளது. குருநாகல் மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் ஒருவரும் அத்தேர்தலை இரத்து செய்யும்படி மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே. கட்சியினரோ வரலாற்றில் தாங்கள் ஜனநாயக விரோத நடவடிக்கைளையோ காடைத்தனங்களையோ என்றுமே செய்யாதவர்கள் போல் ஜனநாயகம் பற்றி பேசுகின்றனர். பொதுஜன ஐக்கிய முன்னணியிடமிருந்து ஜனநாயகத்தை மீட்கப்போவதாக கூறுகின்றனர். அவர்களின் 17 வருட இருண்ட யுகத்தை மக்கள் அவ்வளவு இலகுவாக மறந்து விடமாட்டார்கள் என்பதை அவர்கள் மறந்து விடாமல் இல்லை.

மேற்படி 5 மாகாணசபை தேர்தலை ஒத்திவைத்ததனால் மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டது மட்டுமன்றி 500ற்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் கடந்த ஏழு மாதங்களாக வேலையும், சம்பளமும் இல்லாமல் இருந்து வருகின்றனர்.

## மாற்று இடதுசாரி சக்தியை கட்டியெழுப்ப வேண்டும்

நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்த தினத்திலிருந்து தேர்தலில் போட்டியிடுகின்ற பல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறையில் இருக்கின்றனர். வடமேல் மாகாணசபை தேர்தலை மட்டுமே நடத்தி இந்நாட்டில் காடைத்தனங்களை மிகவும் உச்சமாக கட்டவிழ்த்துவிடப்பட்டன ஆனால் அரசியல் காடைத்தனங்கள் அதிக காலம் நீடிக்கமாட்டாது. மக்கள் அதற்கு சரியான பதிலை வழங்கியே தீருவார்கள்.

ஒரு பக்கம் தென்னிலங்கையில் தேர்தலை நடத்திக்கொண்டு அரசாங்கம் வடக்கு கிழக்கில் யுத்தத்தை மிகவும் கொடூரமாக நடத்திக்கொண்டிருக்கிறது அதை வளர்த்துக் கொண்டே பதவிக்கு வரப்பார்க்கிறது. ஐ.தே.கட்சி யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு காண்பதில் அக்கட்சியின் நிலைப்பாட்டையும் மக்கள் அறிவர்.

ஐ.தே.கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி இரண்டிற்கும் மாற்றாக வருவதாக கூறிக் கொண்டு ஜே.வி.பி மாகாணசபை தேர்தல்களில் குதித்துள்ளது. தமிழ் மக்களின் போராட்டத்தை இனவாதப் போராட்டம் என்று கொச்சைப் படுத்தி இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் உரிமைகள் பற்றி வெளிப்படையாக கூறாத அக்கட்சியின் சந்தர்ப்பவாத நிலைப்பாட்டையும் மக்கள் விளங்கிக் கொள்வர். முதலாளித்துவ கட்சிகள் போன்று தேர்தல் வாக்குறுதிகளை வழங்குவதற்கு ஜே.வி.பி பின்நிற்கவில்லை.

இவ்வாறான நிலைமையில் சரியான கொள்கை ரீதியாக ஐக்கியப்பட்டுள்ள பல இடதுசாரி கட்சிகளின் கூட்டணியான புதிய இடதுசாரி முன்னணியே மக்களின் சரியான தெரிவாக இருக்க முடியும்.

பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலுக்கும், சகலவகை ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக வெகுஜன அரசியல் போராட்டங்களை வலுப்படுத்தி மக்களுக்கான மாற்று அரசியல் சக்தியாக இடதுசாரி சக்திகளை ஒன்றிணைத்து நிலை நிறுத்துவதே புதிய இடதுசாரி முன்னணியின் குறிக்கோளாகும். அதற்கான பாதையிலேயே மாகாணசபைத் தேர்தலிலும் புதிய இடதுசாரி முன்னணி போட்டியிடுகின்றது. தொழிலாளர்கள், விவசாயிகள் புத்திஜீவிகள் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் சகல உழைக்கும் மக்களும் புதிய இடதுசாரி முன்னணியை வெற்றி பெறச் செய்து சரியான இடதுசாரித் தளத்தை வலுப்படுத்த வேண்டும்.

# வதைக்கப்படும் வன்னி மக்கள்

வளம் தரும் பூமியாகத் திகழ்ந்த வன்னிப் பிரதேசம் இன்று வாடி வதங்கி வாழ்விழந்து நிற்கிறது. ராணுவச் சுற்றிவளைப்பிற்குள்ளும் முற்றுகையினாலும் வன்னிப் பகுதி சிதைந்த நிலையில் காணப்படுகிறது. அங்கு உணவு இல்லை. மருந்தும் மருத்துவ வசதிகளும் இல்லை. தொழில் இல்லை. குடியிருக்க சிறு கொட்டில்கள் தானும் இல்லை. மரத்தடி வாழ்க்கையே பெரும்பாலும் காணப்படுகிறது. கல்வி வசதிகள் இல்லை. பாடசாலைக் கட்டிடங்களோ கல்வி உபகரணங்களோ கிடையாது. அரசாங்கம் அரைகுறையாக கிள்ளித் தெளித்து வந்த நிவாரணமும் வெட்டப் பட்டுள்ளன. ஆங்காங்கே பட்டினிச் சாவுகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. சிறுவர்கள் போசாக்கின்மையால் கொடிய நோய்களுக்கு ஆளாகி மரணிக்கின்றனர். வயோதிபர்கள் பசியாலும் நோயாலும் உரிய பராமரிப்பு இன்மையாலும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். வன்னி மக்களின் வாழ்வு துயர் நிறைந்தவையாகவே கழிகின்றன. வன்னிக்கு வெளியே உள்ள உறவினர்கள் யாராவது கஷ்டப்பட்டு அங்கு சென்று பார்த்தால் தமது உறவினர்களை அயலவர்களை உரியபடி அடையாளம் காணமுடியாத அளவுக்கு உருமாறிப் போய் உள்ள கொடுமையினைத் தான் காணமுடிகிறது.

1996 ஏப்பிரல் மாதத்தில் யாழ் குடாநாடு ராணுவ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட போது கணிசமான தொகையான மக்கள் வன்னி நோக்கி பாதுகாப்புத் தேடிச் சென்றனர். அப்படிச் சென்றவர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர். வன்னியில் இன்று நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வடக்கு நோக்கிய வெற்றி நிச்சயம் ராணுவப் படையெடுப்பால் வன்னி மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். தற்போது வடக்கு நோக்கிய படையெடுப்பு மாங்குளத்துடன் நின்றுவிட்டது. ஒட்டிசுட்டானைக் கைப்பற்றிக் கொண்டதால் மேலும் இடம் பெயர்வுகள் இடம் பெற்றுள்ளன. அத்துடன் மாங்குளம், ஒட்டிசுட்டான், ஆனையிறவு, மன்னார் ஆகிய நான்கு திக்குகளில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள், விமானக்குண்டு வீச்சுகள் தொடரப்படுகின்றன. இவற்றுக்கு ஆட்படும் மக்கள் எவ்வகையிலும் தப்பிக் கொள்ள இயலாத சூழல் தான் நிலவுகிறது. மருத்துவ வசதியின்மையும் போக்குவரத்துச் தடைகளும் காயமடைவோரை இறக்கச் செய்கின்றன.

வடக்கு கிழக்கு ஒவ்வொரு வகைத் தனிநாடாகக் கொண்டே அங்கு அரசாங்கம் தனது இராணுவத்தின் மூலம் தாக்குதல்களையும் இரும்புப் பிடியான நிர்வாகத்தையும் நடாத்தி வருகின்றது. வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவமும் தளங்களும் பலங்களும் உள்ளதால் எல்லா இடங்களையும் விட வன்னி சகல வழிகளாலும் குறிவைத்துத் தாக்கப்படுகிறது. இதனால் அரசாங்கம் அடையப்போகிற நன்மை எதுவும் இல்லை. தனது சொந்த நாட்டின் பிரஜைகளான தமிழ் மக்களை இனமொழிக் காரணத்தால் அடக்கி அழிவுகளை ஏற்படுத்துவதைத் தவிர வேறு எதையும் யுத்தம் நடாத்தும் ஆட்சியினர் சாதித்து விடப்போவதில்லை.

# தொண்டமானின் தேர்தல் குண்டு ! மலையக மக்கள் ஏமாறப் போவதில்லை

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் நல்வாழ்வு, மேம்பாட்டுக்காக உதவியும், ஒத்துழைப்பும் வழங்குவதற்கு இந்திய அரசும் தமிழக அரசும் தம்மிடம் இணக்கம் தெரிவித்ததாக இ.தொ.கா. தலைவர் தொண்டமான் பத்திரிகைளுக்கு தெரிவித்துள்ளார்.

அவரது தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சுக்கான வரவு செலவு நிதி ஒதுக்கீடு தோல்வியடைந்த பிறகு மனமுடைந்த நிலையில் இந்தியாவுக்குச் சென்று அங்கு ஒரு மாதத்திற்கு மேல் தங்கியிருந்தார் என்பதே உண்மை. மாகாணசபை தேர்தல் வருவதால் இங்கு வந்து இறங்கியவுடன் இங்கு வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இந்தியா உதவவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் மாகாண சபைகளுக்கான நியமனங்கள் கோரப்பட்டவுடனும் மேற்கண்டவாறு தேர்தல் குண்டை போட்டிருந்தார். அதாவது அப்போது கொழும்புக்கு வந்திருந்த பிரதமர் வாஜ்பாயிடம் கொட்டகலை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியை கேட்டதாகவும், வைத்திய உபகரணங்களை கேட்டதாகவும், இந்தியவம்சாவளி மாணவர்களுக்கு இந்தியாவில் கல்வி கற்க புலமைப்பரிசில் கேட்டதாகவும் தெரிவித்தார். மாகாணசபை தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட பிறகு அக்கதைகள் கைவிடப்பட்டன.

இப்போது மீண்டும் இந்தியா இந்திய வம்சாவளி மக்களுக்கு உதவவிருப்பதாக கூறுகிறார். ஏனெனில்

தொடர்ச்சி 8ம் பக்கம்

வெகுஜன அரசியல் சக்தியை கட்டியெழுப்ப

புதிய அரசியல் தலைமைத்துவத்தை தோற்றுவிக்க

## புதிய இடதுசாரி முன்னணிக்கு வாக்களியுங்கள்!



நன்றி - நூலகத்திட்டம்



# இ.தொ.கா. விற்குள் அதிகாரப் போட்டி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதிகாரப் போட்டிக்குள் அகப்பட்டு நிற்கிறது. அசைக்க முடியாத தனிப் பெரும் தலைவர் தொண்டமானின் பிடி ஆட்டங்காணத் தொடங்கி விட்டது. இறுதியாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மலையக மக்கள் வழங்கிய பலத்த அடியில் இருந்து இன்று வரை இ.தொ.காவினால் மீளமுடியவில்லை. எவ்வளவோ வைத்தியம் செய்த போதிலும் இ.தொ.கா.விற்கு ஏற்பட்ட புற்றுநோயைக் குணமாக்க முடியவில்லை. இது தொண்டமானுக்கு மட்டுமன்றி ஏனைய தலைவர்களுக்கும் பாரிய மனச்சரிவை ஏற்படுத்தி விட்டது. ஏதோ இருக்கும் பதவிகள் அந்தஸ்துக்களைப் பாவித்து அடிக்க வேண்டியவற்றை அடித்து கட்ட வேண்டியவற்றைக் கட்டி தங்கள் தங்கள் சுய ஈடேற்றத்தைப் பெருக்கிக் கொள்வதில் ஒன்பது பா.ஊக்களும் மற்றைய மா.சபை பி.சபை உறுப்பினர்களும் சுறுசுறுப்பாக உள்ளனர். இ.தொ.கா சரிந்தது சரிந்ததுதான். அதனை நிமிர்த்த தாத்தா தொண்டமானாலும் இயலாது. பேரன் ஆறுமுகத்தாலும் முடியாது என்ற நிலையே காணப்படுகிறது.

அப்படி இருந்தும் ஏற்கனவே அதற்கு சில வாய்ப்பான சந்தர்ப்பங்கள் வந்தன என்றும் அவற்றை எதிர்கொள்ள இ.தொ.கா. தலைமை மீண்டும் மீண்டும் தவறி விட்டது என்பதாகவே இ.தொ.கா கீழ் மட்டத் தொண்டர்கள் பேசிக் கொள்கின்றனர். 105 ரூபா சம்பள உயர்வில் வீரம் பேசி விட்டு தொழிலாளர்களை நட்டாற்றில் விட்டு விட்டனர். சரி அது தான் போகட்டும் இரத்தினபுரி வேவல்வத்தையில் நானூறு லயன்கள் எரிக்கப்பட்டு தொழிலாளர்கள் அநாதரவாக விடப்பட்ட போது இ.தொ.கா. ஒழித்து விளையாடி அம்மக்களுக்கு துரோகம் செய்து கொண்டது. அடுத்து பசறைத் தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை மலையகத்தில் ஒரு தாக்கமான பரந்த போராட்டமாக மாற்றி கம்பனிகளுக்கு தக்க பாடத்தை படிப்பித்துக் கொள்வதிலிருந்து தப்பி தாமும் தங்கள் பாடும் என நடந்து கொண்டது.

இத்தகைய முக்கியமான இக்கட்டான சந்தர்ப்பங்களில் மலையக மக்களுக்கு புறமுதுகைக் காட்டிய இ.தொ.கா தலைமை பாராளுமன்றத்தில் குழு நிலை விவாதத்தில் உள்ளகக்கட்டமைப்பு அமைச்சுக்கான பிரேரணை தோல்வி கண்டதுடன் மட்டும் மலையக நகரங்கள் சிலவற்றில் ஆர்ப்பாட்டம் மறியல் சத்தியாக்கிரகத்தை தமது முன்னாள் கூட்டாளியான ஐ.தே.கட்சிக்கு எதிர் எனக் கூறி நடாத்திக்கொண்டார்கள். அதில் தங்களது ஏழு பா.உ. கள், மற்றும் அரசாங்க பா.உ.கள் வாக்களிக்க வில்லை என்பதற்கு இன்றுவரை எந்த இ.தொ.கா. வினரும் பதில் கூறவில்லை.

இந்த நிலையில் தொண்டமான் இந்தியாவில் அஞ்ஞாதவாசம் போய் விட்டார். அவரது இறுதி விருப்பம் பேரன் ஆறுமுகத்திற்கு முடிசூட்டி மகிழ்வதே. அதன் காரணமாகவே அமைச்சின் பணிகளை அவர் மேற்பார்வை செய்ய அதிகாரம் வழங்கும்படி கேட்ட கதை அரசியல் வட்டாரங்களில் அடிப்பட்டது. கூட இருப்பவர்களுக்கு அறவே பிடிக்கவில்லை. வம்சவாரிசு முறையை எதிர்க்கும் சில இ.தொ.கா தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தொண்டமானுக்கு முன் அதனைக் கூறும் துணிவு இல்லை. அவர் இல்லாத போது முழங்குகிறார்கள். இங்கே சாதி முக்கியமானதாக இருந்து வருகிறது. எவ்வளவிற்கு கூறினாலும் இ.தொ.கா விற்குள் சாதியப் படிநிலையில் தான் விடயங்கள் நடக்கின்றன. இ.தொ.கா. வின் தலைமைப்பிடியும் பணபலமும் அதிகாரக் கோலும் உயர்சாதிப் பெரியவர்களின் கையில் தான். ஆனால் பெயருக்கும் எடுபிடி வேலைகளுக்கும் ஊர் உலகுக்கு காட்டவும் இடைச்சாதி, கடைச்சாதிகளின் இருந்து அங்கே பா.உ, மா.உ, பி.உ. போன்றவர்கள் கஞ்சிக்குள் பயறு போல் இருந்து வருகின்றனர். இவை எல்லாம் சிதம்பர இரகசியங்கள் அல்ல அம்பலத்தில் காணப்படும் பரகசியங்கள்.

இதனால் தான் மலையக மக்கள் இ.தொ.கா வை கை கழுவிக் கொண்டு வருகிறார்கள். இதனைப் பொறுக்க முடியாத நிலையில் இ.தொ.விற்குள் சிலர் அடிதடி தண்டு முண்டுகளில் இறங்கியும் வருகின்றனர். ஆனால் மலையக மக்கள் இவற்றுக்கு விரைவில் முழுமையான முற்றுப்புள்ளி பல வகைகளிலும் வைப்பார்கள் என்பது உறுதியானதாகும்.

# வடக்கில் மூடுவிழா தெற்கில் திறப்பு விழா

வடக்கில் 1950ம் ஆண்டில் திறக்கப்பட்டது காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை. கட்டம் கட்டமாக வளர்ச்சிகண்ட அத்தொழிற்சாலை மூவாயிரம் தொழிலாளர்களுடன் மிகவும் தரமான சீமெந்து உற்பத்தியை வழங்கி வந்தது. இலங்கைத் தேவையின் கணிசமான பகுதியை இத்தொழிற்சாலை பூர்த்தி செய்து வந்தது. இதனையொட்டியே காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆனால் 1990ம் ஆண்டின் ராணுவ நகர்வுக்குப் பின் இத்தொழிற்சாலை மூடப்பட்டு தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் பத்து தொழிலாளர்கள் வறுமை தாங்கமுடியாது தற்கொலையும் செய்து கொண்டனர். காங்கேசன்துறை துறைமுகம் இன்று கடற்படையினரின் பாவனையில் இருந்து வருகின்றது. அண்மையில் இத்தொழிற்சாலையை திறப்பதற்கு ஆலோசிக்கப்பட்டபோது இராணுவம் மறுப்புத் தெரிவித்ததுடன் அப்படித் திறப்பதாயின் அத்தொழிற்சாலையை தற்போதைய இடத்தில் இருந்து அகற்றிவேறொரு இடத்தில் அமைக்கும்படி ஆலோசனை தெரிவித்துக் கொண்டது. அவ்வாறு இடம் மாற்றுவதற்கு காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை இராணுவ முகாம் போன்றதோ அல்லது கவச வாகனம் போன்றதோ அல்ல. இத்தொழிற்சாலை இவ்வாறு மூடப்பட்டிருப்பதும், இறுதியில் இல்லாமல் போவதும் பேரினவாத அரசியல் சக்திகளுக்கும் அந்நிய பல்தேசியக் கம்பனிகளுக்கும், மிக மிக தேவையான ஒன்றாகும். அவர்கள் இதனால் குதூகலமும் பெற்று வருகின்றனர்.

இதனை தெற்கிலே திறக்கப்பட உள்ள இந்திய சீமெந்து தொழிற்சாலை மூலம் கண்டு கொள்ளலாம். காலியில் 35 கோடி ரூபா செலவில் இந்தியாவின் பிரபல சீமெந்து உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான குஜராத் அம்புஜா சீமெந்து நிறுவனம் தனது தொழிற்சாலையை நிறுவ அடிக்கல் நாட்டியுள்ளது. இது 5லட்சம் தொன் சீமெந்தை உற்பத்தி செய்யும் இயலளவைக் கொண்டதாக இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. சொந்த நாட்டின் மூல வளங்களும் மனித வளங்களும் பாழடைந்து கிடக்க அதனை மீளமைப்பது பற்றி மறுத்துக் கொண்டு வரும் அரசாங்கம் அன்னிய பல்தேசிய வல்லூறுகளுக்கு தாராளமாக இடம் கொடுத்து வருகின்றது. பெரும் தோட்டக் கம்பனிகள் பலவற்றை தனதாக்கிக் கொண்ட இந்திய மூலதனம் நாட்டின் பல்வேறு துறைகளில் தனது இரும்புக் கரங்களை இறுக்கி வருகின்றது. அதில் ஒன்றே காலியில் ஆரம்பிக்கும் சீமெந்து தொழிற்சாலையாகும்.

பேரினவாத வெறிகொண்ட யுத்தம் ஒரு புறத்தால் வடக்குகிழக்கைச் சூறையாடி நிற்கிறது. அதன் மறைவில் அந்நிய பல்தேசிய கம்பனிகள் தமது சுரண்டல் தளங்களை நாட்டின் ஏனைய பகுதிகளில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள், வடக்கு கிழக்கில் உள்ள சகல தொழிற்சாலைகளும் அழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டு மூடப்பட்டுள்ள அதே வேளை ஏனைய பிரதேசங்களில் பல்தேசியக் கம்பனிகள் தத்தமது தொழிற்சாலைகளைக் திறந்து வருகின்றன. இதனை ஆட்சியாளர்கள் அபிவிருத்தி என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால் வேலை வாய்ப்பு என்ற பெயரில் தொழிலாளர்கள் சுரண்டி சக்கை பிழியப்படுவதைத் தான் இதுவரை பல்தேசியக் கம்பனிகள் மூலம் நாடு கண்டு வந்திருக்கிறது. எதிர்காலத்திலும் இதுவே தொடரப் போகிறது. யுத்தத்திற்கும் திறந்த பொருளாதார தனியார் மயத்திற்கும் உள்ள தொடர்பை இதன் மூலம் காணமுடியும். பேரினவாத பேச்சுக்களின் ஏமாற்றினாலோ அபிவிருத்தி என்ற மாயைகளினாலோ யுத்தம் என்ற திரையினாலோ மக்கள் உண்மைகளை கண்டு கொள்ளாது இருப்பது ஆபத்தானதாகும். யுத்தம் நிறுத்தப்பட்டால் சகலதும் வெளிச்சத்திற்கு வரும் என்பதாலேயே ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய ஆதரவோடு யுத்தத்தைத் தொடர்கிறது. ஆனால் இவையாவற்றையும் அம்பலமாக்கும் மக்களது வெகுஜன இயக்கங்களும் போராட்டங்களும் அவசியமாகும்.

-காங்கேயன்-

# நாலு நடக்கும் உலகிலே

நாலவர்

## போனமச்சான் இங்கே திரும்பி வந்தானடி

1989ல் இந்தியாவுக்கு ஓட்டமெடுத்த வரதராஜப் பெருமாள் மீண்டும் இலங்கை வந்துள்ளார். பராக்.

பத்து வருடகாலமாக அவரை இலங்கை திரும்பாமல் தடுத்தது யார்? பிரேமதாச ஆட்சியென்றால் 1993ல் அவர் திரும்பி இருக்கலாமே! யூ.என்.பி. ஆட்சி என்றால் கூட 1995ல் வந்திருக்கலாமே!

இவரை இவ்வளவு காலமும் வராமல் இந்திய அரசாங்கம் தடுத்து வைத்திருந்ததா? அப்படிச் செய்ய அதற்கு என்ன அதிகாரம் இருந்தது? இப்போது இவர் திரும்பி வந்த தேவை என்ன? இவரது வருகைக்கு அரசாங்கம் கொடுக்கின்ற முக்கியத்துவம் ஏன்?

இவரால் நிச்சயமாக முன்னாள் விடுதலை இயக்கங்களின் நடத்தையை எவ்வகையிலும் மாற்ற முடியாது. இவரைக் காட்டி யாரை யார் ஏமாற்றலாம்? செல்லாக்காசு என்று இவரைச் சொல்வதே கூட மிகையான மதிப்பீடு. எனவே இவரை வைத்திருப்பதால் இனி ஏதும் பயனில்லை என்பது இந்திய அரச யந்திரத்தின் முடிவாயின் அது நம்பகமானது தான். ஆயினும் இதைக் கண்டுபிடிக்க அவர்கட்டுப் பத்து வருடங்கள் பிடித்ததா? ஆயினும் வேறு திட்டங்கள் இருக்கக்கூடும்.

கோழி மலமும் மருந்துக்கு உதவும் என்று ஒரு சிங்களப் பழமொழி.

## என்.ஜி.ஓ. கஞ்சித்தொட்டி

என்.ஜி.ஓ. பணத்தில் நடத்தப்படுகிற ஒரு செய்தி விமர்சன ஏடு கம்யூனிச எதிர்ப்பு ஜன்னியில் பிதற்றுகிற சிலருக்குச் சன்மானம் கொடுத்து எழுதுவிக்கிறதாக அறிகிறோம். என்.ஜி.ஓ. தருமம் கம்யூனிச எதிர்ப்பு போல நற்கருமங்கட்கு வழங்கப்படுவதில் வியப்படைய எதுவும் இல்லையே. வாழ்கஅவர்களது தரும காரியங்கள்.

## வல்லவனுக்கு வல்லவன்

யூ.என்.பி. ஆட்சியைவிட எந்த வகையிலும் தான் பின்தங்கிய ஆட்சி அல்ல என்று பொதுசன ஐக்கிய முன்னணி அரசு நிரூபித்து வந்துள்ளது. அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு நாட்டை அடகு வைப்பதில் யூ.என்.பியை மிஞ்சிய இந்த அரசு போரை நீடிப்பதிலும் தனது சாதனையை நிலைநிறுத்தியது. வடமேல் மாகாணசபைத் தேர்தலில் அரச யந்திரத்தைத் தனது வன்முறைத் தந்திரோபாயங்கட்குப் பயன்படுத்தி யூ.என்.பிக்கே புதிய பாடங்களைக் கற்பித்துள்ளது.

நாட்டின் பாராளுமன்ற ஜனநாயகம் எவ்வளவு தூரத்துக்குப் பணத்தின் மீதும் குண்டர்படைகள் மீதும் தங்கி உள்ளது என்பதை மக்கள் படிப்படியாகவே உணருகின்றனர். மக்கள் முடிவாக வழங்கும் தீர்ப்பை வோட்டுப் பெட்டித் திருடர்கள் விரைவில் அறியத்தான் போகிறார்கள்.

## அந்த நாள் ஞாபகம்..

முன்னாள் புரட்சிகர இடதுசாரியும் இன்றைய அரசாங்கத்தின் எடுபிடிக் கட்சியொன்றன் உறுப்பினருமான ஓ.ஏ. ராமையா சில காலம் முன்பு தொண்டமான் தலைமையில் இந்திய வம்சாவழி ஐக்கிய முன்னணி ஒன்றில் இணைந்தார். இப்போது மாக்சியத்தை இஸ்லாத்துடன் ஒப்பிடுவதை எதிர்த்துக் கடுமையாக ஆட்சேபித்து தினகரனில் மதம் மக்களின் அபினி என்ற கூற்றை வாய்ப்பாடு போல ஒப்பித்தும் இருக்கிறார்.

இஸ்லாத்தின் மத நம்பிக்கை உள்ள ஒருவர் மாக்சியராக இல்லாமல் போகலாம். ஆயினும் அவர் முற்போக்குவாதியாக இருக்க முடியும். தொண்டமானிடம் 'திருவடி சரணம்' என்று தஞ்சமடையும் மாக்சிய வேடதாரி நிச்சயம் முற்போக்குவாதியாக இருக்க முடியாது.

## நாடகமே உலகம் !

ஈழத்தின் சிறந்த நாடக இயக்குனர்களில் ஒருவரான பாலேந்திரா நீண்ட காலத்தின் பின்பு லண்டனிலிருந்து இலங்கை வந்திருந்தார். ஐரோப்பாவில் அவரது நாடகப்பணி பற்றி இலங்கை வானொலி நேயர்கட்கு அறியத் தரும் நோக்கில் 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சியில் அவருடனான தொலைபேசி நேர்காணல் ஒன்று ஜனவரி முதல் வாரத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் அவரிடம் கேள்வி கேட்கவும் கலந்துலையாடவும் கோரப்பட்ட உள்ளூர் நாடகத் துறைப் பிரபலங்கள் சிலர் அந்த நேரத்தைத் தம்மைப் பற்றி விளம்பரம் பண்ணப் பயன்படுத்திக் கொண்டார்களே ஒழிய பாலேந்திராவின் பணிபற்றி எதையும் கேட்கவோ அறியவோ விரும்பவில்லை. 'செய்யவும் மாட்டார்கள், செய்யவும் விடமாட்டார்கள்' என்று ஒரு கூட்டம் எப்போதுமே இருக்கும் தான்.

## வெட்கக் கேடு

பொ.ஐ.முன்னணிக் குண்டர்களுக்கும் ஐ.தே.கட்சி குண்டர்களுக்கும் நடந்த மோதலில் அரச இயந்திரக் குண்டர்களது உதவியுடன் பொ.ஐ.மு. மாபெரும் வெற்றியீட்டியது. பல இடங்களில் புதிய இடதுசாரி முன்னணிக்கு வாக்களிக்கச் சென்றவர்கள் வழிமறிக்கப்பட்டனர். ஜே.வி.பியும் இந்த விதமான குண்டர் வலிமைக்கு முன் பணிய நேர்ந்தது. இந்தச் தேர்தல் மூலம் நிறுவப்பட்டுள்ளது என்ன? ஜனநாயக ஆட்சி என்பது பணம், பிரசார பலம் ஆகியவற்றால் மட்டுமல்லாமல் குண்டர் படைகள், அரச வன்முறை மிரட்டல் ஆகியவற்றாலும் தீர்மானிக்கப்படுகிற ஒன்று என்பதே

இந்த மகத்தான வெற்றியைப் பெற்றுக்கொடுத்த சீருடை அணிந்த குண்டர்கட்கு அரசாங்கம் பதவி உயர்வு வழங்கலாம். சீருடை அணியாத குண்டர்களுக்கு அரசாங்கம் சட்டத்தின் பிடியினின்று விலக்களிப்பதன் மூலம் கொள்ளை, மிரட்டல் மூலம் சம்பாத்தியத்தைப் பெருக்க வலிமை அளிக்கலாம். பொ.ஐ.மு. என்ற பேரை பொலிசார் முரடர்கள் முன்னணி என்று மாற்றினால் என்ன?

## ஒளிவுமறைவில்லாத சனாதிபதி

ஒளிவுமற்ற இல்லாமலே நமது சனாதிபதியின் சிறப்பான அடையாளம் அன்று அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி பாராட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் அவரது நேர்காணலில் தமிழர் நாட்டின் பூர்வகுடிகளல்லர் என்று சொன்னதிலிருந்தே நமக்கு இது தெரிந்திருக்க வேண்டாமா?

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදියපූමි

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## அழிவுப்பாதையில் இழுத்துச் செல்லப்படுகிறது

வடமேல் மாகாணசபைத் தேர்தல் இதுவரை வரலாறு கண்டிராத வன்முறையும் மோசடியும் மிக்க தேர்தல் என்று வர்ணிக்கப் பட்டுள்ளது. அதில் நியாயமும் உண்மையும் உண்டு. ஆனால் அரசாங்கமும் அதன் தலைவர்களும் அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். சகல அடாவடித் தனங்களுக்கும் அத்துமீறல் மோசடிகளுக்கும் வக்காலத்து வாங்கி நிற்கிறார்கள். அன்று யூ.என்.பி. செய்து கொண்டது தானே. நாம் செய்தால் மட்டும் தவறானதா? ன்பதே அவர்களது நியாயமாக இருக்கிறது.

1981ல் வடக்கில் மாவட்டசபைத் தேர்தல் இடம் பெற்றபோது அன்றைய யூ.என்.பி. அமைச்சர்கள் தலைமையில் வாக்குப் பெட்டி களவாடப்பட்டது. பகிரங்க தேர்தல் மோசடி நிகழ்த்தப்பட்டது. அப்பொழுது தான் யாழ்ப்பான நூல் நிலையம் 93.000 நூல்களுடன் கொழுத்தப்பட்டது. அந்த தீச் சுவாலையைப் பார்த்து ரசித்து விட்டே யூ.என்.பியின் தமிழ்க் கனவான்கள் உட்பட அமைச்சர்கள் கொழும்பு திரும்பினர்.

1982ல் சர்வசன வாக்கெடுப்பின் போதும் தேர்தல் பெட்டி மாற்றும் மோசடியும் கள்ள வாக்கு அளித்தலும் உச்சத்தை அடைந்நது. அதனால் 82வீத வாக்குகளால் சர்வசன வாக்கெடுப்பு வெற்றி கொள்ளப்பட்டது. இத்தகைய தேர்தல் வெற்றிக்குப் பின்பே 1983ன் நாடு தழுவிய இனவன்செயல் கட்டவிழ்த்து விடப்பட்டது. திட்டமிட்ட இவ் இனவன்செயலை ஜே.ஆர். தலைமையிலான அரசாங்கமே முன்னின்று நடாத்தியது. ஜே.ஆர்.சிறில் மத்தியூ, காமினி திசநாயக்கா உட்பட சகல யூ.என்.பி தலைவர்களும் குதூகலித்து கொண்டனர். இந்நாட்டில் தமிழர்களுக்கு நல்ல பாடம் புகட்டி விட்டதாக நம்பிக் கொண்டனர். அதன் எதிர்கால விளைவு எத்தகையது என்பதை அவர்களால் கணிக்க முடியவில்லை. ''முட்டாள்கள் கல்லைத் தூக்குவது முடிவில் தமது கால்களில் போட்டுக் கொள்வதற்கே'' என்பது போன்று வரலாறு பிரதிபலனை முழு நாட்டிற்கும் வழங்கிக் கொண்டது.

அதே போன்றே வடமேல் மாகாணசபைத் தேர்தலில் செய்யப்பட்ட முறைகேடுகள் மோசடிகள். வன்முறைகள் போன்றவற்றை அரசாங்கம் ஊக்குவித்து பால் கொடுத்துள்ளதன் மூலம் புதியதோர் சூழல் உருவாகியுள்ளது. ஒன்று எதிர்க் கட்சிகளின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் வேட்டையாடப்பட்டு வருகின்றனர். இரண்டாவது இன வன்முறை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது. வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பு குருநாகல் தேர்தல் தொகுதியில் ஒரு முஸ்லீம் கிராமம் தாக்கப்பட்டு கடைகள் சேதமாக்கப்பட்டன. தேர்தலுக்குப் பின்பு கட்டுகம்பல தொகுதியில் அலபடகம முஸ்லீம் கிராமம் தாக்கப்பட்டது. அதன் பின் பன்னல நகரில் முஸ்லீம்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு கொள்ளை தீவைப்பு நடைபெற்று ள்ளது. இது தற்போது நொச்சியாகம நகருக்கு நகர்த்தப்பட்டுள்ளது. அங்கும் முஸ்லீம்களின் கடைகள் தாக்கப்பட்டு பலர் படுகாயங்கள் அடைந்துள்ளனர்.

தேர்தல் வன்முறையில் தொடங்கி இனவன்முறைகளாக வளர்ச்சி பெறுவது இலங்கையின் வரலாறாகியுள்ளது. இத்தடவை இந்த இனவன்முறை புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது. இவ் இனவன்முறைக்குப் பின்னால் இரண்டு முக்கிய பேரினவாத அமைப்புகள் இருப்பதாக நம்பப் படுகிறது. ஒன்று சிங்கள வீரவிதான இயக்கம், இரண்டாவது பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணியாகும். இவையிரண்டும் வெறுமனே அரசியல் நோக்கம் கொண்டவை அல்ல. பௌத்த சிங்கள பேரினவாத வெறி கொண்டவையாகும். இவற்றுக்கு அரசாங்க, எதிர்க்கட்சி, உட்பட தீவிர சிங்களவாத அரசியல் கட்சிகளுக்குள்ளும் ஆதரவு உண்டு. மேலும் ராணுவத்திலும் பொலிஸ் படையிலும் இவற்றுக்கு அதிகரித்து வரும் செல்வாக்கு இருப்பதாக அறிய முடிகிறது. அண்மையில் கொழும்பில் தமிழர்கள் முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களின் முழுமையான விபரங்கள் பெற்றுக்கொள்ளும் படிவங்கள் விநியோகிக்கப் பட்டிருப்பதையும் காணமுடிகிறது.

ஒரு புறத்தால் சமாதானத்திற்கான தேசிய கூட்டமைப்பு என்னும் பெயரில் மதத்தலைவர்களும் சமூக அக்கறையாளர்களும் சமாதானத்திற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்கள் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தி திரும்பியுள்ளதுடன் பெப்ரவரி 26ல் சமாதானப் பேரணியும் கூட்டமும் நடாத்த உள்ளனர். மறுபுறத்தில் சிங்கள வீரவிதான இயக்கம், பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி, பிக்குமார் அமைப்புகள் யுத்தத்தை விரிவாக்கக் கோரியும் நாடு தழுவிய இன இரத்தக் களரிக்கும் தயாரிப்பு செய்தும் வருகின்றன.

இவ்விரண்டு நிலைகளில் அரசாங்கத்தின் போக்கு பேரின வாதிகளுக்கு ஊக்கமளிப்பதாகவே காணப்படுகிறது. யுத்தம் முதல் பாடப் புத்தகங்களில் பேரினவாதிக் கருத்துக்கள் புகுத்தப்பட்டுள்ளது வரை அரசாங்கம் பேரினவாதிகளுக்கு முன்னால் அடிபணிந்த நிலையிலேயே நிற்கிறது. அத்துடன் தேர்தல் வன்முறைகளுக்கு ஊடாக நவீன ஆயுதங்கள் பேரினவாதிகளினது அமைப்புகளுக்குச் சென்றடையும் அபாயமும் தோன்றி உள்ளது. அத்துடன் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளது ஆதரவும் அரவணைப்பு பேரினவாத அமைப்புகளுக்கு கிடைத்திருப்பதாகவும் நம்பப் படுகிறது. ஆதலால் பேரினவாதம், யுத்தம், அந்நிய ஏகாதிபத்தியம் இவை மூன்றுக்கும் ஏதிராக சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்களது பேரியக்கம் கட்டியெழுப்பப்பட்டு விரிவு படுத்தப்படாது விட்டால் இலங்கையை அழிவுப்பாதையில் இருந்து தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

– ஆசிரியர் குழு –

# புதிய இடதுசாரி முன்னணியும் மாகாணசபைத் தேர்தலும்

கடந்த வருட நடுப்பகுதியில் நடைப்பெற்றிருக்க வேண்டிய ஐந்து மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் தனது அவசரகாலச் சட்டத்தின் மூலம் காலவரையின்றி பின்போட்டுக் கொண்டது. இது ஒரு அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல் என்பதை சகல ஜனநாயக சக்திகளும் எதிர்த்தன. அதன் அடிப்படையில் பல்வேறு அரசியல் கட்சிகள் நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்தன. அத்தகைய வழக்கு ஒன்றின் தீர்ப்பிலேயே மேற்படி தேர்தல் பின்போடப்பட்டமை தவறு என்றும் உடன் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. அதன் விளைவாகவே பின்போடப்பட்ட தேர்தலை நடாத்த அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்பிரல் முதலாம் திகதி மேற்கு, வடமத்திய, மத்திய, ஊவா, சப்பிரகமுவ ஆகிய ஐந்து மாகாணசபைகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. இத் தேர்தலில் அரசாங்க, எதிர்கட்சி ஆகியவற்றுடன் ஏனைய கட்சிகளும் களத்தில் இறங்கி நிற்கின்றன. கடந்த ஒரு வருடத்தினுள் ஆறு இடதுசாரி கட்சிகளும் அமைப்புகளும் ஒன்றிணைந்து உருவாக்கிய புதிய இடதுசாரி முன்னணியும் இத் தேர்தலில் பங்கு கொள்கின்றது. புதிய ஜனநாயக கட்சி, நவசமசமாஜக் கட்சி, தேசிய ஜனநாயக இயக்கம், தியச அமைப்பு, முஸ்லீம் ஐக்கிய முன்னணி ஆகியனவே அவ் ஆறு கட்சிகளாகும். இம் மாகாணசபைத் தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணி ஊடாக அதில் அங்கம் பெறும் சகல கட்சிகளின் சார்பாகவும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். இதில் புதிய ஜனநாயக கட்சி மத்திய மாகாணசபைக்கான நுவரேலியா மாவட்டத்தில் அதிக வேட்பாளர்களைக் கொண்டிருப்பதுடன் முதன்மை வேட்பாளராக கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா போட்டியிடுகிறார். அத்துடன் கட்சியின் மலையக தலைமைத் தோழர்களும் உறுப்பினர்களும் ஏனையவர்களுடன் அப் பட்டியலில் போட்டியிடுகின்றனர். அதேபோன்று மேற்கு மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கட்சியின் பொருளாளர் சோ.தேவராஜா உட்பட நான்கு பேர் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றனர்.

இவ்விடத்திலே புதிய ஜனநாயகக் கட்சி எவ்வாறு இம் மாகாணசபைத் தேர்தலை நோக்குகின்றது என்பது குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். புதிய ஜனநாயகக் கட்சியின் அடிப்படையான அரசியல் மார்க்கம் வெகுஜனப் புரட்சிகர மார்க்கமே அன்றி பாராளுமன்ற மார்க்கம் அல்ல என்பதே அதன் நிலைப்பாடாகும். கட்சியின் முதலாவது இரண்டாவது, மூன்றாவது தேசியக் காங்கிரஸ் இதனை தெளிவுபடுத்தி வந்துள்ளது. அத்துடன் அவ் வெகுஜனப் புரட்சிகர மார்க்கத்தை சக்திப்படுத்தி அமைப்பு ரீதியாக முன்னெடுப்பதற்கும் தொழிலாளி வர்க்கம் உழைக்கும் மக்கள் மத்தியில் கட்சியின் கொள்கைகள் வேலைத் திட்டங்கள் என்பனவற்றைக் கொண்டு செல்லவும் அவ்வப்போது இடம் பெறும் தேர்தல்களைப் பயன்படுத்தி கொள்ளல் வேண்டும் என்பதையும் கட்சி தனது கொள்கையாக வரையறுத்துக் கொண்டது. தேர்தல்களில் பங்கு கொள்வதை மிக வரட்டுத்தனமாக நிராகரிப்பதோ அன்றி விறைப்புத் தனமாக சாதகபாதகப்பார்வை இன்றி ஏற்றுக் கொள்வதோ கட்சியின் நிலைப்பாடு அல்ல. கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் யதார்த்த சூழலுக்கு ஏற்றவகையில் பரிசீலித்து மாக்சிக லெனினிச மாஓ சேதுங் சிந்தனை அடிப்படையிலான கட்சியின் குறிக்கோள் இலட்சியம் அதன் முன்னோக்கிய வீறு நடைக்குப் பலம் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். மக்களிடமிருந்து தூரவிலகி அந்நியப் பட்டு யதார்த்தத்தைக் கணக்கில் கொள்ளாது வெறும் வரட்டுச் சூத்திரங்களை ஒப்புவித்துக் கொள்வதன் மூலம் தொழிலாளி வர்க்கப் புரட்சிகரக் கட்சியைக் கட்டியெழுப்பிவிடவோ அன்றி சமூக மாற்றத்தை நோக்கிய பயணத்தை செய்யவோ இயலாது. ஒரு குறிப்பிட்டவர்களின் விருப்பு வெறுப்பைக் கொண்டிருப்பதை விட மக்கள் மத்திக்குச் சென்று அவர்களது விருப்பு வெறுப்பின் ஆழஅகலத்தைப் புரிந்து கொண்டு அணிதிரட்டுதல் அவசியமானதாகும்.. இது கடந்த முப்பத்தைந்து வருடகால இலங்கையின் அரசியல் களத்தில் மாக்சிச லெனினிச மாஓ சிந்தனைவாத சக்திகள் கண்டு கொண்ட நடைமுறை அனுபவமும் பட்டறிவுமாகும். ஒரு மாக்சிச லெனினிச கட்சி முதலாளித்துவ தேர்தலில் பங்கு கொள்வது என்பது அதன் சகதிகளுக்குள் இறங்கி தன்னை இழந்து கொள்வதல்ல. முதலாளித்துவ அமைப்பின் அடிப்படைகளையும் அதன் பாராளுமன்றத் தேர்தல் முறை வகுத்துள்ள எல்லைகளையும் நாம் முழுமையாகப் புரிந்து கொள்ளல் அவசியம். அவை எந்தளவு தூரத்திற்கு ஜனநாயகத்தின் பெயரால் வழங்கக் கூடிய சந்தர்ப்பங்களை ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சி மிகுந்த தந்திரோபாயங்களுடன் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதேவேளை முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பும் தேர்தல் முறைமையும் விரித்துள்ள வலையில் சிக்குண்டு கொள்ளாமலும் தன்னைத் தற்காத்துக் கொள்ளல் வேண்டும்.

> **நேர்மையான இடதுசாரிகள் மாற்று அரசியல் சக்தியாக ஐக்கியப்பட்டு வளரவேண்டும்.**

## வெகுஜனன்

மேற்கூறிய அடிப்படையிலேயே தேர்தல்களை புதிய ஜனநாயக கட்சி நோக்குகின்றது. அத்துடன் புதிய இடதுசாரி முன்னணி என்பது இடதுசாரி சக்திகளின் ஒரு கூட்டணியாகும். அதற்கென ஒரு வேலைத்திட்டமும் நடைமுறைகளும் உண்டு. அதனிடம் தனி ஒரு கட்சியின் நிலைப்பாட்டை எதிர்பார்க்க முடியாது. கூட்டுக் கலந்துரையாடல் மூலம் விட்டுக் கொடுத்தல் புரிந்துணர்வு அடிப்படையில் இடதுசாரி சக்திகளை ஒன்றினைக்கும் ஒரு தளமாகவே புதிய இடதுசாரி முன்னணி செயல்படுகிறது. அது இன்னும் முன்செல்ல வேண்டிய தூரம் அதிகம் உண்டு. தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினைகளும் அங்கே உண்டு. அங்கு கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறைக் கொள்கைகள் சம்மந்தமாகவும் ஐக்கியமும் போராட்டமும் இருந்து கொண்டே இருக்கும். ஆனால் அத்தகைய போராட்டம் அவ் ஐக்கிய முன்னணியை ஊறுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி என்பனவற்றுக்கு மாற்று சக்தியாக ஒரு உறுதியான இடதுசாரி சக்தி ஒன்று நாட்டிற்கும் மக்களுக்கும் தேவைப்படுகிறது. அத் தேவையை எந்தவொரு தனி இடதுசாரிக் கட்சியும் நிறைவு செய்ய இயலாது. ஆனால் நிச்சயமாக ஒரு ஏற்றுக் கொள்ளக்கூடிய பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இடதுசாரி சக்திகளின் ஐக்கிய முன்னணியே தேவையானதாகும். அத்தகைய தேவையின் ஆரம்பக் கட்டத்தை புதிய இடதுசாரி முன்னணி மூலம் நிறைவேற்ற முடிந்துள்ளது. ஆனால் இன்னும் நாட்டில் இடதுசாரி சக்திகள் இருந்து வருகின்றன. அவற்றை எல்லாம் ஐக்கியப் படுத்தல் வேண்டும். ஜே.வி.பியின் முக்கியமான சில கொள்கை நிலைப்பாடுகளில் மாற்றமும் தெளிவும் ஏற்படாதவரை புதிய இடதுசாரி முன்னணியுடனான ஐக்கியம் என்பது சாத்தியமற்றதாகவே காணப்படுகிறது. அதேவேளை புதிய இடதுசாரி முன்னணி மீது மக்களின் கவனம் திரும்ப ஆரம்பித்துள்ளது. இதனை வடமேல் மாகாணசபைத் தேர்தலில் நடைமுறை ரீதியாக காண முடிந்தது. அத் தேர்தலைப் பயன்படுத்தி குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் மக்களிடம் புதிய இடதுசாரி முன்னணியின் வேலைத் திட்டத்தையும் கொள்கை களையும் முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. அதன் காரணமாக பொதுசன ஐக்கிய முன்னணி செய்த தேர்தல் காடைத்தனத்தின் மத்தியிலும் குறிப்பாக புதிய இடதுசாரி முன்னணிக்கு அதிக ஆதரவு வழங்கிய பிரதேசங்கள் பகுதிகள் கிராங்கள் போன்வற்றில் வாக்காளர் அட்டை பறிப்பு, வன்முறை, அச்சுறுத்தல் போன்றவற்றையும் மீறி மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்தனர். மிகக் குறுகிய கால வேலைகள் வளங்களின் பற்றாக்குறை போன்றவற்றின் மத்தியிலும் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் பதின் மூவாயிரத்திற்கு சற்று அதிகமான வாக்குகளை மக்கள் வழங்கி இருந்தனர். இது புதிய இடதுசாரி முன்னணியின் மீது மக்களுக்குரிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் எடுத்துக் காட்டியுள்ளது.

எனவே எதிர் வரும் தேர்தல்களில் வாக்குகள் கூடலாம் குறையலாம் வெற்றி அல்லது தோல்வி ஏற்படலாம். ஆனால் இத் தேர்தல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் மக்கள் மத்திக்குச் செல்லவும் அவர்களுக்கு அரசியல் அறிவூட்டவும் அணிதிரட்டவும் உரிய தருணமாகும். இதனையே புதிய இடதுசாரி முன்னணியின் தேர்தல் வேலை ஊடாக நமது கட்சியும் ஏனைய கட்சிகளும் பல்வேறு மாவட்டங்களில் செய்வதற்கு முழு முயற்சிகளைச் செய்து வருகிறது. அத்துடன் புதிய இடதுசாரி முன்னணியை வெற்றி பெறச்செய்வது மிகவும் தேவையான ஒன்றாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# கிராம சேவையாளர் நியமனம் கதி என்ன?

மலையகமெங்கும் ஆயிரம் கிராம சேவையாளர்களை நியமிப்பது என்று அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தபோதும் நூறு கிராம சேவையாளர்களை நியமிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர். அந்த நூறு பதவிகளுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்களை பார்ப்பதற்காக அப்பதவிகளுக்காக விண்ணப்பித்த மலையக இளைஞர்கள் இ.தொ.கா. ம.ம.மு காரியாலயங்களுக்கு ஏறி இறங்கிய வண்ணம் இருந்தனர்.

ஆனால் அந்த நூறு நியமனங்களும் வழங்கப்படமாட்டாது என்று தற்போது பேசப்படுவதை கேட்கக் கூடியதாக இருக்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி, போன்ற சிங்களப் பேரினவாத அமைப்புகளின் எதிர்ப்பின் காரணத்தினாலேயே அந்நியமனங்கள் வழங்கப்படமாட்டாது என்று தெரியவருகிறது.

கிராமசேவையாளர்கள் நியமனத்தை வாங்கித் தந்துவிட்டதாக தம்பட்டம் அடித்த மலையக எம்.பிக்கள் மௌனமாகவே இருந்து வருகின்றனர்.

கிராம சேவையாளர் பதவியை வாங்கிக் கொடுத்துவிட்டதாக கூறி வாக்கு கேட்பதும், தொழிற் சங்கங்களுக்கு ஆட்கள் சேர்ப்பது என்பதை விட மிகவும் முக்கியமான சமூக அக்கறை இருக்க வேண்டியது அவசியமாகும். ஒரு சமூகத்திற்கு விளங்கக் கூடிய மொழியில் கடமையாற்றும் கிராமசேவையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது சட்டரீதியான உரிமையாகும். அதனை வலியுறுத்தி மலையகத் தமிழ் கிராம சேவையாளர்களை நியமிக்கும்படி மக்கள் இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும். ■

# அய்யாத்துரையின் கண்டுப்பிடிப்பு

வடமேல் மாகாணசபை தேர்தலில் பொதுஜனஐக்கிய முன்னணிக்கு கிடைத்த வெற்றியானது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மீது நாட்டு மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் டி. அய்யாத்துரை பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளார்.

பொதுஜனஐக்கிய முன்னணிக்கு எதிரான கட்சிகள் மட்டுமின்றி பொதுஜனஐக்கிய முன்னணியின் அமைச்சரான ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே உட்பட சில அரசாங்க அமைச்சர்களும் எம்.பிக்களும் வடமேல்மாகாணசபை தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியால் மோசடிகள் புரியப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். குருநாகல் மாவட்ட எம்.பியும் பண்டுவஸ் நுவர தொகுதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளருமான ராஜகருணா அவரின் அமைப்பாளர் பதவியை இராஜிநாம செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். அதைவிட அத்தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.க, புதிய இடதுசாரி முன்னணி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, லிபரல் கட்சி என்பன வடமேல் மாகாணசபை தேர்தலை மீண்டும் நடத்தும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிலைமைகள் இவ்வாறிருக்கையில் அய்யாத்துரை அவசரப்பட்டு அறிக்கை விட்டுள்ளார். வெல்லுகிற பக்கத்துக்கு 'ஜே' போடும் மலையகத் தொழிற்சங்கத் தலைவர்களில் அவரும் ஒருவராக இருந்து வருகிறார் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. எனினும் உண்மைகளுக்கு மாறாக அறிக்கை விட்டதால் அவரின் தனிப்பட்ட நேர்மையும் கேள்விக்குள்ளாகி விட்டது. ■

# மலையகத்தில் தமிழ் லிகிதர்கள் நியமனம் இரத்து

அரசாங்க பரிபாலனத்துறைக்கும், நீதித்துறைக்கும் என மலையகத்திலிருந்து தமிழ் லிகிதர்களை நியமிக்க முடிவெடுக்கப்பட்டிருந்தது. அதற்காக மலையகத்திலிருந்து பலர் பரீட்சைக்கு தோற்றி, தேறியிருந்தனர்.

ஆனால் அரசாங்கம் அப்பரீட்சையை இரத்து செய்துவிட்டு புதிதாக பரீட்சையை நடத்துவதற்காக விண்ணப்பங்களை கோரியிருந்தது. அவ்விண்ணப்பங்கள் தமிழர்களுக்கென தனியாகவன்றி சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் பொதுவாக கோரப்பட்டுள்ளன. இதனால் தமிழர்கள் பாதிக்கப்படலாம்.

தமிழர்களுக்கென அல்லது தமிழ் மொழியில் கடமையாற்றுபவர்களுக்கென தனியாக தெரிவுகள் நடக்காவிட்டால் தமிழ் லிகிதர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய கட்டாயம் கிடையாது. இதனால் தமிழ் விண்ணப்பத்தாரிகள் மட்டுமன்றி பொதுவாக மலையகத் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவர். அவர்கள் தமிழ்மொழி தெரியாதவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய நிலையும் தொடரும்.

மலையகத்திலுள்ள அரசாங்க காரியாலயங்களிலும், நீதிமன்றங்களிலும் தமிழ் லிகிதர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை கொள்கைரீதியிலும் நடைமுறை ரீதியிலும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத விடத்து ஆயிரம் கூக்குரலிட்டபோதும் பயனேற்படப் போவதில்லை.

இந்நிலையில் மலையகத் தமிழ் லிகிதர்கள் நியமனத்தை வைத்துக்கொண்டு தமது இருப்பை காப்பாற்ற முனைந்த மலையகத் தொழிற்சங்கத் தலைவர்களின் அடுத்த பொய் என்னவாக இருக்குமோ? ■

# ஆறுமுகம், செட்டியார் ஆனார்?

மலையக மக்கள் முன்னணியின், முன்னணிப் பேச்சாளர் "ஆறுமுகம் செட்டியார்", ஹைபொரஸ்ட் த. வித்தியாலய நிலம் தொடர்பாக பேச்சு எனும் செய்தி வீரகேசரியில் வந்தது.

கடந்த கால மலையக வரலாற்றில், மலையக தொழிற்சங்கங்கள் அத்தனைக்குள்ளும் சாதியம் ஏதோ ஒரு வகையில் ஆதிக்கம் செலுத்தி வந்தது, வருகின்றது. சாதி பார்ப்பது, சாதிக்காரனை பதவிகளில் அமர்ந்துவது முக்கியத்துவம் கொடுப்பது என்பவற்றில் இ.தொ.கா. மிக முக்கிய பங்காற்றியது. தொண்டமானின் வரலாறு பற்றி எழுதப்பட்ட நூலில் தொண்டமான் உயர் சாதிக்காரராக காட்டுவதில் நூலாசிரியர் பெரும் முயற்சி செய்திருக்கிறார். இன்றுவரை இந்தச் சங்கத்தில் சாதி ஆதிக்கம் விட்டுப் போகவில்லை.

காங்கிரசுக்கு மாறான கட்சியாக தங்களைக் காட்டிக் கொண்ட மலையக மக்கள் முன்னணி காங்கிரசுக்கு எல்லாவகையிலும் நிகர் என்பது வரலாறு. வி.டி.தர்மலிங்கத்தின் புதைக்குழிச் சண்டை வரை இந்த சாதித்தனம் இருந்து வருகிறது.

இதனை வைத்து கொண்டு தான் மேற்கூறிய ஆறுமுகம் என்பவர் தனக்குப்பின்னே செட்டியார் பட்டம் சூட்டிக் கொண்டதைப் பார்க்க வேண்டும். இவர் செட்டியார் எனக் காட்டிக் கொள்வதனூடாக தன்னை உயர் சாதிக்காரராக காட்ட முனைவது மட்டுமல்ல மற்றவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நினைப்பும் அவருக்கு வந்து விடுகிறது.

மலையகத்தில் ஏற்கனவே சாதியின் பெயரால் சங்கமமைத்து பலன்பெற்று வருவோர் யார். தேர்தல் காலங்களில் சாதியினைச் சொல்லி வெட்கங் கெட்டத்தனமாய் வாக்கு கேட்டு வருவதும் உண்டு. அந்தவகையில் "ஆறுமுகம் செட்டியாரும்" ஒருவர். இந்தப் பெயரை வைத்துக் கொண்டு வாக்குக் கேட்கப் போகிறார்.

இவ்வாறு சாதியின் பெயரால் வாக்குகேட்டு பிழைப்பு நடத்துகின்றவர்களை மக்கள் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள். உண்மையான மானுட விடுதலைக்காகப் போராடுகின்றவர்களோடு ஐக்கியப்படுவதையே மலையக மக்கள் தமது புதிய தலைமுறையினர் ஊடக புரிந்தும் ஏற்றும் வருகின்றனர். ■

# தாயும் மகளும் தமிழ்த் திரைப்படங்களும்

சிரிமா பண்டாரநாயக ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலிருந்து வந்த குப்பைப் பத்திரிகைகள் மீதும் இந்தியாவின் கீழ்த்தரமான சினிமாப்படங்கள் மீதும் இறக்குமதிக் கட்டுப்பாடு இருந்தது. இது என்ன நோக்கை உடையதாக இருந்தாலும் பொதுப்பட நல்ல விளைவையே தந்தது. தரமான ஈழத்துக் கலை இலக்கிய வளர்ச்சியில் இக் குப்பைக் கலாச்சாரத்தின் மீதான கட்டுப்பாட்டுக்கு ஒரு நல்ல பங்கு இருந்தது.

தமிழில் நல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இங்கு கிட்டத்தட்ட இல்லை எனலாம். ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒரு சடங்கு மட்டுமே. பல வேறு சிங்கள நிகழ்ச்சிகள் சிங்கள மக்களுக்கு ஒரு தெரிவையாவது தருகின்றன. இப்போது அரசாங்கத்தின் மாற்றாந்தாய் மனப்பான்மையை யிட்டுத் தமிழரின் மனச்கசப்பைப் போக்கத் தனியார் நிறுவனமான எம்டி.வி. தொலைக்காட்சி இப்போது எட்டு மணி நேரத்துக்கு மு.கருணாநிதி குடும்பத்தின் கம்பெனியான 'சன் டி.வி' நிகழ்ச்சிகளை வழங்குகிறது.

மகளின் ஆட்சியின் கீழ் தமிழ்ச் சின்னத் திரையின் உதவாக்கரை நிகழ்ச்சிகள் தமிழ் மக்களது கலை உணர்வையும் ரசனையையும் சுரணைகெடச் செய்வதற்காக வந்து கொட்டுகின்றன. 'கலைஞர்' கருணாநிதிக்கு அது காசு. அவரது தேவைகளில் பெரியன காசும் கழகத்தில் குடும்ப ஆதிக்கமும் ஆட்சியில் தனது நிலைப்பும் தானே.

இங்கே சின்னத்திரை வழியே தமிழ் மக்களைச் சீரழிக்கிற அதே வேளை தமிழிலும் நிறைய நிகழ்ச்சிகளை வழங்குகிறதாக ஒரு பம்மாத்து. இது அரசாங்கத்தின் பொதுவான நடத்தையுடன் மிக உடன்பாடானது அல்லவா.

# கண்டுபிடியுங்கள்

வடமேல் மாகாணசபை தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவாக தோட்டப்பகுதிகளில் வேலை செய்வதாக வாக்குறுதி அளித்த சில தொழிற்சங்கங்கள், அப்பகுதி தோட்டங்களுக்கு சென்று தமது சங்கங்களுக்கு ஆள்சேர்க்கும் விண்ணப்பங்களை விநியோகித்ததாக அறியமுடிகிறது.

தோட்டப்பகுதியில் பிரசாரங்களை செய்ய பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் நிதியை பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அந்த தொழிற்சங்கங்கள் எவை என்று கண்டுபிடிப்பது கடினமல்ல. ■

# வீடா? கக்கூசா?

மலையகத்திற்கு புகையிரதத்தில் பிரயாணம் செய்த வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பக்கத்தில் இருந்தவரிடம் ஒரு மலையில் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்த சிறிய கட்டிடங்களைச் சுட்டிக் காட்டிக் கேட்கிறார். ஏன் இங்வளவு மலசல கூடங்களையும் ஒரே மலைச்சரிவில் கட்டியுள்ளார்கள். எல்லோரும் ஒரே மலைக்கு வந்து தான் கக்கூஸ் இருக்க வேண்டுமா? அடுத்தவர் கூறினார். அவை கக்கூஸ்சுகள் அல்ல. மலையக மக்களுக்கு நம்ம மந்திரி எம்.பி. ஆகியோர் வாங்கி கட்டிக் கொடுத்த வீடுகள். ஆனால் அவற்றை வீடுகள் என்று நம்ப அந்த நபர் மறுத்தே விட்டார். என்ன! இவை வீடுகளா? என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டார்.

**மலையகப் பட்டிமன்றத்தில் கேட்ட துணுக்கு**

# சந்திப்பு

உங்கள் ஊர்
எப்படி இருக்கின்றது
நண்பரே !

இன்னும்
அப்படியேதான்
இருக்கிறது.

ஏழைத்தொழிலாளிகள்
கரடு முரடான
தெருக்கள்........
நீர் வராத
குழாய்கள்
கொழுந்தெடுத்து
மரத்துப்போன
என் தாயின்
கரங்கள் !

படுக்கையிலிருந்தே
நிலா தரிசனம்
பலவந்த கருக்கலைப்பு
தேர்தல் காலத்தில்
படியேறும் தலைவர்கள்
சந்தாவிற்காக மட்டும்
தொழிற் சங்கங்கள்

இன்னும்
அப்படியே தான்
இருக்கின்றது.

வேறு விசேடங்கள்
உண்டா
நண்பரே!

தொண்டர்
நிறுவனங்கள்
கோடி கோடியான
வெளிநாட்டு பணமும்
இவர்களின்
ஏமாற்று வேலைகளும்
பொய்யான
கோட்பாடுகளும்

இளைஞர்களை
ஏமாற்றிப் பயன்படுத்திய பின்
நடு ரோட்டிற்கு
தள்ளுவதும்
பிச்சையாக கிடைத்த
காசை
இரு மாணவர்களுக்கு
புலமை பரிசிலாக்கிவிட்டு
நான் வளர்த்தேன்
என்று மார்தட்டிக்
கொள்ளுவதும்

கல்விமான்களை
பகடையாக்குவதும்
எதிர்ப்போரை
தீர்த்து கட்டுவதுமாக
பல விசேஷங்கள்

மாற்றங்கள்
ஏதும்
நிகழுமா
நண்பரே!

சேவலும்
மயிலாகி விட்டது
மண்வெட்டி
கரம் மாறி விட்டது

இதை விட இளைஞர்களின்
கண்கள்
கூர்மை
பெற்று விட்டன
புதிய பாதைகள்
வெட்ட
களமிறங்கிய

இளைஞர்கள்
சிலர்
தைரியமாக
உண்மை
பேசுகிறார்கள்

வெற்றி
பெறும் காலம்
நெருங்கி விட்டது
விடை பெறுவோம்
நண்பரே !

**சை. கிங்ஸ்லி கோமஸ்**

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்களினது வாழ்க்கையின்

நீளம் 10 அடி

அகலம் 12 அடி

"எங்களுக்கு உண்மையிலே விலாசம் இல்லை. சிவகுமார் என்ற எனக்கு கடிதம் வந்தால் சிவகுமார் என்ற பெயரை கொண்டிருக்கும் நான் வசிக்கும் மத்துரட்ட தோட்டத்தில் இருக்கும் எல்லோரினதும் கைகளுக்கு சென்று இறுதியிலேயே எனது கைகளுக்கு வந்து சேரும். எங்களுக்கு சொந்தமாக வீடுகளோ, எங்களது லயத்துக்கு அறைகளுக்கு இலக்கங்களோ இல்லை. அதனால் எமக்கு விலாசம் இல்லை.

நான் 12 ஆம் ஆண்டுவரை படித்தேன் பீட்சை எழுதவில்லை. பாடசாலைக்கு செல்ல 30–35 கிலோமீட்டர் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. காலை 6 மணிக்கு வரவேண்டிய பஸ் எங்கள் இடத்துக்கு வராவிட்டால் அன்றைய நாள் முழுவதும் நாங்கள் பிரயாணம் செய்ய பஸ்ஸே இருக்காது. டியூசனுக்கு போக வேண்டுமென்றால் கண்டிக்கு போக வேண்டும். எல்லாவற்றையும் விட பொருளாதாரப் பிரச்சினை எங்களுக்குப் பெரியது. எனது அப்பா மரக்கறி பயிரிடுபவர். ஆனால் எங்களுக்கென்று மரக்கறி தோட்டம் செய்ய காணி இல்லை. மத்துரட்ட தோட்டத்திலுள்ள ஒரு சிறிய காணித் துண்டில் மரக்கறி செய்கிறோம்.



ஒரு குடும்பம் முழுவதுமே 10 அடி நீளமும் 12அடி அகலமுமுள்ள (10X12) காம்பராவில் வாழ்வது என்பதுதான் மிகவும் பாரதூரமான பிரச்சினையாக இருக்கிறது. அப்பா, அம்மா, திருமணம் முடித்த அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, நான் உட்பட எல்லோரும் வசிப்பது அந்த ஒரே அறையில்தான். ஆண்கள் ஆடைகளை மாற்றும் போது பெண்கள் வெளியே போக வேண்டியிருக்கும். பெண்கள் ஆடைமாற்றும் போது ஆண்கள் வெளியே போக வேண்டியிருக்கும். வீட்டுக்கு விருந்தாளிகளாக வருபவர்களும் கூட அதே அறையிலேயே நித்திரை கொள்ள வேண்டியிருக்கிறது.

புதிதாக திருமணம் முடித்தவர்கள் தாம்பத்திய உறவில் ஈடுபடுவதும் கூட பெரியதொரு பிரச்சினை. அம்மா, அப்பா, தம்பி, தங்கை என்போர் இருக்கும் அறையிலேயே தாம்பத்திய உறவிலும் ஈடுபட வேண்டியிருக்கிறது. இதெல்லாம் சிறியவர்களாகிய எங்களுக்கு பெரிய பிரச்சினையே.

எங்களுக்கு படிப்பு இல்லை. தொழில் இல்லை. நிதமும் கொழுந்து பறிக்க மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தோம். இப்போ அதற்கும் வழியில்லை. இதனால் மலையக தொழிற் சங்கங்களால், கட்சி களால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்ற முடிவுக்கே வந்து விட்டோம்.

நுவரெலியா மாவட்டத் தில் மட்டுமல்ல இலங்கையி லுள்ள எல்லா தோட்டங்களிலும் இதே கதிதான்.

றப்பர் தோட்டங்களின் நிலைமையோ, மிகவும் மோசம். றப்பர் தோட்டங்களை விலைக்கு வாங்குவோர் றப்பர் மரங்களை வெட்டி விற்பதால் அங்கு தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. மழை பெய்யும் காலங்களிலும் வேலை இல்லை.

இவ்வளவு பிரச்சினைக்கு மத்தியில் உழைக்கும் பணத்தில் மாதாந்தம் 33 ரூபாவை தொண்டமானின் சங்கத்திற்கு சந்தாவாக கொடுக்கிறார்கள். ஏனைய சங்கங்களும் அத்தொகையை கேட்கின்றன.

தொண்டமானோ, சந்திரசேகரனோ இருந்துவிட்டு எப்போவாது தோட்டங்களுக்கு வந்து "உங்களுக்கு வீடுகளை கட்டித்தருவேன் காணிகளை பெற்றுத் தருவேன். என்று கூறிவிட்டுச் செல்வர்" இதேபோன்று சிங்கள மக்களுக்குப் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. வடமேல் மாகாணம் எனக்கு நிறைய அனுபவங்களை தந்துள்ளது.

எனவே சிங்களவர்கள் தமிழர்கள் எல்லோரும் ஒரே வள்ளத்திலேயே இருக்கிறோம். எங்களுக்கு இருக்கும் தலைவர்கள் என்போரே எங்களை ஏமாற்றி வருகின்றனர்.

இதற்கு ஒரே தீர்வு மக்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வை தேடிக்கொள்ளுவதற்காக மக்கள் இயக்கத்தினை கட்டி வளர்ப்பதாகும்.

மேற்கண்டவாறு கந்தபொளை மத்துரட்ட தோட்டத்தைச் சேர்ந்த சிவம் என்று அழைக்கப்படும் வீரையா சிவகுமார் 'ராவய' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அவர் வடமேல் மாகாணத்தில் புதிய இடதுசாரி முன்னணியின் தேர்தல் வேலைகளை முன்னெடுத்தபோது மேற்படி பேட்டியை அளித்துள்ளார்.

இவர் புதிய ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராவார். நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணியின் பட்டியலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடா நாட்டின் அவலங்கள்

வடக்கு தனித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனை இராணுவமே நிர்வகித்து வருகிறது. அங்கு சிவில் நிர்வாகம் என்பது வெறும் பெயருக்கு மட்டுமே உரியதாகும். வடக்கில் குடா நாட்டிற்குள் ஐந்து லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களது அன்றாட வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் இல்லாமை போதாமை இயலாமை என்பதாகவே காணப்படுகின்றது. குடா நாட்டின் சில பகுதிகளில் மக்கள் இன்னும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. மீளக்குடியமர்ந்தவர்களும் தமது இயல்பு வாழ்க்கையை சகஜ நிலைக்கு கொண்டு வரமுடியவில்லை. பொருளாதாரத்துறை சீரழிந்து காணப்படுகிறது. பெரிய சிறிய தொழிற்சாலைகள் அழிந்தும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. முக்கிய இடத்தை வகிக்கும் விவசாயம் முடக்கப்பட்டுள்ளது. பாடுபட்டு செலவு செய்து உற்பத்தி செய்தாலும் வெளியே சந்தைப்படுத்துதல் என்பது முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது. இதனால் விவசாய உற்பத்தியை நம்பி எதையும் செய்ய முடியாத நிலைதான். உற்பத்தி செய்வோர் மட்டுமின்றி விவசாயத் தொழிலாளர்களின் நாளாந்த வருமானமும் இல்லாதுள்ளது. இதனால் குடாநாட்டின் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அரைகுறைப் பட்டனி வாழ்க்கை வாழ்கின்றனர் ஏனைய சிறுகைத் தொழிலாளர்கள் அன்றாட உழைப்பாளர்களுக்கு வேலை கிடைப்பது கடினமாகவே இருந்து வருகிறது.

மேலும் பொருட்களின் வரவுக்கான ஒரே பாதை கடல் மார்க்கமே. கப்பல்கள் வருவதைப் பொறுத்தே பொருட்களின் விலைகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்து வருகின்றன. எப்பொழுதும் ஏதாவது சில பொருட்களுக்கு தட்டுப்பாடும் விலை ஏற்றமும் இருந்து கொண்டே இருக்கும். ஒரு தேங்காய் எண்பது ரூபா, ஒரு கிலோ சீனி அறுபது ரூபா விற்கும் நிலை காணப்படுகிறது. இவற்றுடன் மருத்துவ மனைகளில் மருந்து தட்டுப்பாடு. போதிய மருத்துவ வசதி இன்மை தொடர்கிறது. உள்ளூர் போக்குவரத்து சீர் பெறவில்லை அதே போன்று கொழும்புக்கான போக்குவரத்து துண்டித்தல் துன்பமாகவே தொடர்கிறது. கல்வியும் பாடசாலைகளும் சீர்குலைந்து தான் காணப்படுகிறது. அதே வேளை சமூகச் சீரழிவுகள் கொடிகட்டிப் பறக்கின்றன. அவை மட்டுமே தமது இயல்பு வாழ்க்கைக்கும் மேலான நிலையைப் பெற்றுள்ளன.

இவை ஒரு புறமிருக்க ராணுவ நிர்வாகத்தின் கீழ் பல்வேறு கெடுபிடிகளை மக்கள் அன்றாடம் அனுபவிக்கின்றனர். யாவற்றுக்கும் அனுமதி பெற்றே ஆகவேண்டியுள்ளது. சட்டம் ஒழுங்கு சிவில் நிர்வாக விடயங்கள் யாவற்றையும் ராணுவமே தீர்மானிக்கின்றன. அத்துடன் சுற்றிவளைப்பு தேடுதல் கைது தடுத்து வைத்தல் சித்திரவதை என்பன அதிகரித்த வண்ணம் உள்ளன. ஆட்கள் காணாமல் போவதும் இனம் காணமுடியாத கொலைகளும் நாளுக்கு நாள் வளர்ந்து செல்கிறது. பலதரப்பினரிடமும் தாராள ஆயுதங்கள் இருந்து வருவதால் மர்மக் கொலைகள் நிகழ்கின்றன. இதனால் பயப்பீதி நிலவுகிறது. மனித உரிமை ஆணைகுழுவின் யாழ்ப்பாணச் செயலகத்தில் முறைப்பாடுகள் பதியப்படுகின்றனவே அன்றி அதனால் அதிக பயன் கிடைப்பதாகத் தெரியவில்லை.


இன்று குடாநாட்டில் மக்கள் வாழ்கிறார்கள் என்று கூறுவதை விட தத்தமது வாழ்வுக்காக ஒவ்வொரு முனையிலும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதனை இயல்பு வாழ்க்கை எனக் காட்டிக் கொள்ள சிலர் முற்படுகிறார்கள்.

ஆனால் அது உண்மையான இயல்பு வாழ்க்கை அல்ல. மக்கள் தமது அன்றாட வாழ்க்கை எத்தகைய தலையீடும் அற்ற சுதந்திரமானதும் அச்சமற்ற ஒன்றாகவும் அமைவதையே ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். வீட்டிலும் வீதியிலும் வேலைத் தலங்களிலும் பாடசாலைகளிலும் தோட்டங்களிலும் தொழில் செய்யுமிடங்களிலும் அச்சம் என்ற தவிப்பு இவற்றுடனேயே குடாநாட்டு ஒவ்வொரு மனிதரும் தமது அன்றாடப் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது. இவ்அவல நிலை எப்போது மாறப்போகிறது. தமது இழந்து போன வாழ்வை எப்போது மக்கள் மீளப் பெறப் போகிறார்கள் என்பதே சகலவற்றையும் மேவிய மக்களது எதிர்பார்ப்பாகும்.

அத்தகைய ஒரு நிலை ஏற்பட வேண்டின் மோதல்களுக்குப் பதிலாகப் பேச்சு வார்த்தையும், ஒடுக்குமுறைத் தீர்வுக்குப் பதிலாக நியாயமான அரசியல் தீர்வும் ஏற்படவேண்டும். ராணுவத்தினரதும் ஏனைய ஆயுதம் தரித்தவர்களினதும் இருப்பு இல்லாது போக வேண்டும். உண்மையான சிவில் நிர்வாகம் நடைமுறைக்கு வரவேண்டும். இவை அனைத்தும் ஒன்றின் பின் ஒன்றாக இடம் பெற்றாலே இயல்பு வாழ்க்கை குடா நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி முழு வடக்கு கிழக்கு மக்களுக்கும் ஏற்படமுடியும். ஆனால் இது எப்போது என்பதே மக்களது கேள்வியாகும்?


**நமன்**

# ஒகாலன் கைது அநீதியானது



குர்திஷ் தொழிலாளர் கட்சியின் ஆரம்பத் தலைவர்களில் ஒருவரும் சிறந்த மாக்சிச லெனினிச வாதியும், குர்திஷ் மக்களின் பேரன்பிற்குரிய தலைவருமான அப்துல்லா ஒகாலன் கென்யாவில் இம்மாத நடுப்பகுதியில் கைது செய்யப்பட்டார். அவரது கைது கபடத்தனமானதும் கோளைத்தனமானதுமாகும். அவர் எந்த துருக்கியின் கொடிய சர்வாதிகாரத்திற்கும் இன அழிப்பிற்கும் எதிராகப் போராடி வந்தாரோ அந்தப் பிற்போக்கு பாசிச ஆட்சியிடம் ஒகாலன் கையளிக்கப்பட்டுள்ளார். இன்று அவர் துருக்கிய கொடும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படலாம் என அஞ்சப்படுகிறது. அவரது கைதும் கையளிப்பும் உலகம் பூராவும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தி உள்ளது. தமது சுயநிர்ணய உரிமைக்காக துருக்கிய கொலனி ஆதிக்கவாதிகளிடம் போராடி வரும் குர்திஷ் மக்களிடையே தணிக்க முடியாத கோபாவேசத்தை உருவாக்கியுள்ளது. ஒகாலன் கைதின் மூலம் குர்திஷ் மக்களது ஆயுதம் ஏந்திய போராட்டம் நின்று விடப் போவதில்லை. 29 ஆயிரம் பேரின் கொலைக்குப் பொறுப்பானவர் என்று பொய் கூறி ஒகாலனை ஒரு கொலையாளியாகக் காட்டுவதற்கு துருக்கிய ஆட்சியாளர்கள் பிரச்சாரம் மேற்கொள்கிறார்கள். அவர் ஒரு புரட்சிவாதி அதுவ்ம் மாக்சிச லெனினிசவாதி. குர்திஷ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக–குர்திஷ் நாட்டிற்காகப் போராடிவரும் ஒரு விடுதலைப் போராட்ட வீரர், ஏகாதிபத்தியத்தால் விலை கொடுத்து வாங்கப்படமுடியாத தலைவர். அவரது தலைமைத்துவத்தின் ஆற்றலை இன்று ஐரோப்பா முழுவதிலும் அகதிகளாக வாழ்ந்து வரும் குர்திஷ் மக்களின் ஆத்திரத்துடனான ஆர்ப்பாட்டங்களில் காணமுடியும். ஒகாலனின் கைதுடன் குர்திஷ் மக்களது போராட்டம் முடிவுக்கு வந்துவிடும் என துருக்கிய சர்வாதிகாரிகள் கனவு காண்பது மடமைத்தனமானதாகும். ஏனெனில் ஒகாலன் குர்திஷ் தொழிலாளர் கட்சியின் ஆரம்பத் தலைவர்களில் ஒருவரும் முக்கியமானவரும் ஆக இருந்த போதிலும் பலம் மிக்க மாக்சிச லெனினிசக் கட்சியும் வல்லமை பொருந்திய மக்கள் படையும் குர்திஷ் மண்ணில் மிக ஆழமாக வேர் விட்டு நிற்கிறது. ஒகாலன் கைது பாதகமானதாக அமைந் துள்ள போதிலும் குர்திஷ் மக்களது போராட்டத்தை முழு உலக மக்களுக்கும் அறியத் தந்துள்ளது. அப்துல்லா ஒகாலன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற குர்திஷ் மக்களதும் உலக மக்களதும் கோரிக்கையுடன் நாமும் இணைந்து கொள்வோம்.

# குர்திஷ் மக்களது போராட்டம் வெல்லும்!



கங்காணி: தேர்தல் வருகுது. நம்ம தலைவர்களை வெல்ல வைக்கணும். உசாரா வேலை செய்யணும்.

ராமசாமி: இதுவரை நம்மை ஏமாத்தின எந்தப் பயலுகளுக்கும் வோட்டுப் போடுறதில்லை. புதிய கட்சிக்காறங்களுக்குத்தான் நம்ம வோட்டு.

கங்காணி: ஏண்டா! அந்தளவுக்கு துணிஞ்சிட்டிங்களா? சரி சரி பாத்துக்கிறன்.

நன்றி - நூலகத்திட்டம்



# நமது அறமும் அவர்களது அறமும்

## (மாக்ஸியவாதியின் நியாயமும் தேசியவாதியின் நியாயமும்)

தேசியமே அடிப்படையானது என்ற வாதம் இப்போது பெரிதும் அடங்கிவிட்டது. தேசியவாதத்திற்கு அதன் வரலாறு அடிப்படையில் ஒரு தத்துவார்ந்த நியாயம் வழங்க முயற்சி எடுத்தவர்களால் தமது வாதங்களின் அபத்தமான முடிவுகளினின்று மீள முடியவில்லை. தேசியவாதத்தின் தத்துவ நியாயமும் சித்தாந்த விளக்கங்களும் தோற்ற காரணத்தால் அது அழிந்துவிடவில்லை. ஏனெனில் தேசிய இன ஒடுக்கல் உள்ள இடத்தில் தேசிய வாதத்திற்கான ஊட்டம் இருக்கிறது. தேசிய இன ஒடுக்கலுக்கோ எந்தத் தேசிய இனப் பிரச்சினைக்கோ தேசியவாதத்தின் அடிப்படையில் எவரும் தீர்வு தேடும் போது தீர்க்க முற்பட்ட பிரச்சினையை விட மோசமான பிரச்சினைகட்கு வழி ஏற்படுத்தி விடும் ஆபத்து அதிகம். அந்த ஆபத்து தேசியவாதத்திற்கு உள்ளேயே பொதிந்துள்ள ஒன்றாகும்.

தேசியவாதம் முற்போக்கான ஒன்றாக உள்ள சூழ்நிலைகளில் கூட, சிலசமயம் மக்கள் மத்தியிலான சிநேக முரண்பாடுகளில் பகைமையான பண்புகளைப் புகுத்திவிடுகிறது. அதனுடைய நியாயம், தேசிய இனங்களுக்கு

> **தேசிய நியாயம் தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டம் என்ற எல்லையைத் தாண்டும் போதே தேசிய மேலாதிக்கம் என்ற படிக்கட்டில் காலை வைத்து விடுகிறது.**

உள்ளேயும் கூட மனித சமத்துவ நோக்கில் பொய்த்து விடுகிறது. மாக்ஸிய நியாயம் அதன் நடைமுறைப் படுத்தலில் ஏற்படக் கூடிய தவறுகளையும் அணுகு முறையில் இருக்கக்கூடிய குறைபாடுகளையும் மீறி ஒரு அடிப்படையான மனித சமத்துவ நெறியின் மீதே அமைய முடிகிறது. மாக்ஸியத்தின் பேரால் குறுகிய தேசியவாத நிலைப்பாடுகளை மேற்கொள்வோரின் வர்க்க நிலைப்பாடு பாட்டாளிவர்க்க விரோதமாகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதகமாயும் அமைந்து விடுவதை நாம் காணலாம். தேசிய இனப்பிரச்சினையில் மட்டுமன்றி, சமுதாயத்தின் எந்த முரண்பாடும் மனிதர் மீது மனிதர் தொடுக்கும் ஒடுக்குமுறையாக அமைகிற ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒருவரது, மாக்ஸிய அணுகுமுறையை நாம் பரீட்சைக்கு உட்படுத்தலாம். பல வேறுபட்ட தீர்வுகட்கும் தீர்மானங்கட்கும் மத்தியிலும் நேர்மையான மாக்ஸிய அணுகுமுறை உடையோர் மத்தியில் அடிப்படையான ஒற்றுமைகளை நாம் காணமுடியும். தேசியவாதத்தால் தேசியமுரண்பாடு தவிர்ந்த பிரச்சினைகளில் எந்த வித உடன்பாட்டையும் தேட இயலாது போவது விளங்கக்கூடியது. அதை விடத் தேசியவாதம் தனக்குள் ஏற்படுத்திக் கொள்கிற அடையாளச் சிக்கல்கள் பாரியன.

சகல சமூக அரசியற் சிந்தனைப் போக்குக்களும் மனிதரது சமூக அடையாளம் சார்ந்தே விருத்தி பெறுகின்றன. சமூகத்தில் மனிதருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அடையாளங்கள் உள்ளன. இந்த அடையாள வேறுபாடுகள் மனிதரிடையிலான முரண்பாடுகட்குக் காரணமாகின்றன. பால் வேறுபாடு தவிர்ந்த பிற அனைத்தும் காலத்தால் மாறுபடுகின்ற அடையாள வேறுபாடுகளே. அவற்றை நாம் வரலாற்றில் வைத்தே நோக்க வேண்டிய உள்ளது.

சில அடையாளங்கட்கு நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சி உண்டு. நிறம், இனம் போன்றவை இவற்றுக்கு முக்கிய உதாரணங்கள். ஆயினும் நிறக்கலப்பும் இனக்கலப்பும் வரலாற்றில் தொடர்ந்தும் இருந்தே வந்துள்ளன. மொழி, பண்பாடு, வாழுகின்ற பிரதேசம், மதம் போன்றவை மனிதர்களை ஒரு சமூகப் பிரிவாக அடையாளங் காணவும் சேர்ந்து இயங்கவும் செய்வன. ஆயினும் இவை கூடத் தனி மனித அளிவிலும் சமுதாயக் குழுக்கள் என்ற அளவிலும் மாற்றத்திற்கு உட்பட்டு வந்தவையே. மனித சமுதாயங்களின் வளர்ச்சியின் போக்கில் உழைப்பின் பிரிவும் அதனை ஒட்டி ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் மனிதரை மனிதர் சுரண்டி வாழ்வதை ஒரு சமூக நிறுவனமாக்கும் வர்க்க சமுதாயமாக அமைய இயலுமாக்கின. இன்றைய உலகின் மனித சமுதாயங்கள் யாவுமே வர்க்க அடிப்படையிலானவை. அந்த வகையில், உலக வரலாறு வர்க்க முரண்பாடுகளது வரலாறாகவும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவுமே இருந்து வந்துள்ளது.

மனிதர் பிற மனிதருடன் பூணும் உறவுகளில் அவர்களது அடையாளம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. மனித அடையாளங்கள் மனித உறவுகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பது ஒவ்வொரு அடையாள வேறுபாட்டுக்கும் நாம் வழங்கும் முக்கியத்துவத்தைப் பொறுத்தது. மனிதரிடையிலான அடையாள வேறுபாடு அடிப்படையில் ஒரு சிநேக முரண்பாடே இதற்கு வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. ஆட்சி அதிகாரம் இந்த முரண்பாடுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் போது இம் முரண்பாடுகளுள் பகைமையான பண்புகள் புகுத்தப்பட்டு வளர்த்தெடுக்கப் படுகின்றன. நிற வெறி, இனவாதம், பிரதேசவாதம், மொழிவெறி, மதவெறி, தேசியம், சாதியம், வருணாசிரமம் போன்றவை யாவும் ஒவ்வொரு வரலாற்றுச் சூழலில், ஒரு சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிற ஒரு சிறுபான்மைப் பிரிவு தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும் விஸ்தரிக்கவும் எடுக்கிற நடவடிக்கைகளை நியாயப் படுத்துகிற சித்தாந்தங்களே.

வரலாற்றில் மனிதர்களது அடையாளம் தொடர்ந்து மாறுகிறது. இனக்கலப்பு, மொழிக்கலப்பு, மதமாற்றம், மதங்களில் ஏற்படும் மாற்றங்கள், நாடுகட்கும் பிரதேசங்கட்கும் இடையில் பலவேறு தளங்களில் நிகழும் உறவாடல்கள், போர், ஆக்கிரமிப்பு, புலப்பெயர்வு, குடிவரவும் குடியகல்வும், கருத்துப் பரிமாறல்கள், தொடர்பு ஊடகங்களது விரிவாக்கம் போன்று பல விதமான செயற்பாடுகள் மனிதச் சமூகங்கள் தமக்கென வழங்கும் அடையாளங்களை மாற்றுகின்றன. அதே வேளை இன அழிப்புப் போன்றவற்றையும் வரலாறு கண்டிருக்கிறது. இங்கே அடையாளம் பற்றியும் பொது அடையாளத்திற்கு உட்படாத இரு

> **மனிதர் பிறமனிதருடன் பூணும் உறவுகளில் அவர்களது அடையாளம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.**

சமுதாயங்களிடையிலான உறவு பற்றியும் தேசியவாதப் பார்வையும் மாக்ஸியப் பார்வையும் தெளிவாகவே வேறுபடுவதை நாம் காணலாம். இப் பார்வை வேறுபாடே மாக்ஸிய அறத்தையும் தேசிய அறத்தையும் வேறுபடுத்தி நிற்கிறது.

**இமயவரம்பன்**

தேசிய நியாயம், தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டம் என்ற எல்லையைத் தாண்டும் போதே தேசிய மேலாதிக்கம் என்ற படிக்கட்டிற் காலை வைத்து விடுகிறது. ஐரோப்பிய வெள்ளை இன வாதமும், கிறிஸ்துவ மதவாதமும், ஐரோப்பிய தேசியவாதங்களும் யூத இனமக்களுக்கு எதிராக நடத்திய கொடுஞ்செயல்களின் வரலாறு பல நூற்றாண்டுக்கால விரிவை உடையது. அது ஜேர்மன் பாஸிஸமான நாற்சியமெனும் வடிவில் யூதர்களை ஒடுக்கிய போது கூட ஐரோப்பியத் தேசியவாதங்கள் முதலில் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஏகாதிபத்திய நலன்கட்காக உலக வல்லரசுகள் இஸ்ரேலை உருவாக்கிய பின்பு,

> **வரட்டு மாக்ஸியம் மாக்ஸியம் அல்ல. அது வாழுகின்ற மாக்ஸியத்தால் கழித்து விடப்பட்ட வரலாற்று எச்சம்.**

விடுதலைக்காகப் போராடிய யூத தேசியம் ஆக்கிரமிப்பாளனாகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களை மத்திய கிழக்கிற் காத்து நிற்கும் காவலனாகவும் மாறி விட்டது. அரபுத் தேசியவாதங்களாகத் தம்மைக் காட்டிக்கொள்கிற பல வேறு அரபு ஆட்சிகள் பலஸ்தீன மக்களது விடுதலையை விடத் தேசியவாதத்தின் பேராலும் தமது நாடுகளில் தமது ஆட்சியை உறுதிப்படுத்தவும் தம் செல்வத்தைப் பெருக்கவும் செய்த காரியங்களே முதன்மையானவை.

பல வேறு இனங்களைக் கொண்ட நாடுகளில் தேசிய அடையாளம் என்பது சிக்கலானது. சில சமயங்களில் ஒரே இனத்து மக்கள் கூட மதம், பிரதேச வேறுபாடு போன்ற காரணங்களால் தமது தனித்துவத்தை வலியுத்துகின்றனர். மறுபுறம், உதாரணமாக கியூபாவில், கறுப்பு இனத்தவரும் வெள்ளை ஸ்பானிய வம்சாவழியினரும் கலப்பு இனத்தவரும் தம்மை ஒரு தேசத்தவர்களாகவே கருதுவதைக் காணலாம். மேற்கிந்திய தீவுகளில் குடியேறிய இந்திய வம்சாவழியினர் இந்திய அடையாளத்தை எப்போதோ நிராகரித்துவிட்டனர். அவர்களது இந்திய அடையாளம் சில சமயங்களில் குறுகிய அரசியல் லாபம் கருதி, கயானாவில் போன்று, பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளால் அவர்கட்கு எதிராகப் பாவிக்கப்பட்டும் உள்ளது.

நாம் கவனிக்க வேண்டியன என்ன வென்றால் தேசிய வாதத்தில் 'இயற்கையானது' எனவோ நிரந்தரமானது எனவோ எதுவும் இல்லை என்பதும் தேசியவாதம் என்பது குறிப்பிட்ட ஒரு காலச்சூழலில் ஒரு சமுதாயத்தின் சமூக அரசியற் பிரச்சினைகளின் விளைவாகக் கட்டியெழுப்பப்படும் ஒன்று என்பதுமே.

இந்தியத் தேசிய வாதமும் தமிழ்த் தேசியவாதமும் இந்துத்துவமும் இன்று தமிழகத்திற் தலை தூக்கி வரும் சாதி அடையாளங்களும் ஒப்பிடத் தக்களவு அபத்தமானவை தாம். இந்த அடையாளங்கள் ஒவ்வொன்றுமே குறுகிய கால நோக்குடன் வசதி படைத்த ஒரு சிறு சமுகப் பிரிவினரது நலன்கட்காகவே வளர்க்கப் படுகின்றன. இதனால் இவை குறிக்கும் மனித அடையாளங்கள் அபத்தமானவை யாகி விடமாட்டா. அவைமதிக்கப்பட வேண்டும். இந்த மதிப்பை எல்லா மனிதர்கட்கு மிடையிலான சமத்துவமாக எண்ணி அவற்றைப் பேணும் உரிமையை ஏற்பது மாக்ஸிய அணுகுமுறை. ஒரு குறிப்பிட்ட அடையாளத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி அதன் நலன்கட்கு மற்றவற்றின் நலன்களைக் கீழ்மைப் படுத்துவது தேசியவாத அணுகுமுறை.

> **ஒரு குறிப்பிட்ட அடையாளத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி அதன் நலன்களுக்கு மற்றவற்றின் நலன்களைக் கீழ்மைப்படுத்துவது தேசியவாத அணுகுமுறையாகும்.**

இலங்கையில் இன்றுங் கூடச் சிங்கள மக்களை இழிவு செய்யும் முறையிற் தமிழ்த் தேசியவாதிகள் பேசுவதை நாம் கேட்கலாம். சிங்களப் பேரினவாதிகள் தமிழரை இழிவு செய்வதும் தமிழ், முஸ்லிம் இனத்தவர்கட்கு எதிராகத் தொடுத்து வருகிற தாக்குதல்களும் எந்த வகையிலும் சிங்கள மக்களை நிந்திப்பதை நியாயப் படுத்த மாட்டா என்பது மாக்ஸிய நிலைப்பாடு. ஒரு மாக்ஸியவாதி சீரழியும்போதே குறுகிய தேசியவாதம் அவரது சிந்தனையை ஆக்கிரமிக்க முடிகிறது. லங்கா சமசமாஜக் கட்சியும் திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சியும் 1960களின் பின் வெகுசனப் புரட்சியை நிராகரித்ததோடு இந்தச் சறுக்குப்பாதையில் கால்வைத்ததை நாம் கண்டோம். நேர்மையான ஒவ்வொரு மாக்ஸியரும் அதைக் கண்டிக்க தவறவில்லை எனவும் நாம் கண்டோம். அதைக் கண்டிப்பதற்கு ஒரு மாக்ஸியர் தமிழராகவோ முஸ்லிமாகவோ இருக்க அவசியமாகவில்லை. இவ்வாறே வடக்கு கிழக்கில் விடுதலையின் பேரால் முஸ்லிம்களும் சிங்களவரும் இம்சிக்கப்படும் போது ஒரு மாக்ஸியவாதி தனது தேசியஇன அடையாளம் பற்றிய கவலை இல்லாது அதைக் கண்டிக்க முடிகிறது.

முன் கூறியது போல, தேசிய இனப்பிரச்சினையில் மாக்ஸிய நியாயமும் தேசிய நியாயமும் வேறுபடுவதற்கான அடிப்படை எளிமையாக விளங்கிக்கொள்ளக் கூடியது. முதலாவது நியாயம் எந்தத் தேசிய இனமும் ஒடுக்கப்படுவதை எதிர்க்கிறது. இரண்டாவது நியாயம் ஒரு குறிப்பிட்ட இனம் ஒடுக்கப்படுவதை எதிர்த்து அந்த இனம் பிற இனங்களை ஒடுக்குவதை ஏற்கிறது.

சிங்களப் பிரதேசங்களிலோ வட இந்தியாவிலோ பிற இந்தியாவிலோ உலகின் வேறு மூலைகளிலோ பிழைப்புக்காகச் சென்ற தமிழர்கள் தமது மொழி அடையாளத்தை இழப்பது பற்றிச் சினக்கிற தமிழ்த் தேசியவாதம், தமிழ்நாடு உட்படத் தமிழர் பெருவாரியாக வாழுகிற பகுதிகளுள் வந்து குடியேறிய தெலுங்கர், மராத்தியர் போன்றோர் தமது மொழியை மறந்தே ஆகவேண்டும் என்று வற்புறுத்துவதை நாம் காணலாம். அது மட்டுமன்றிப் பிற மாநிலங்களிலிருந்து வந்தோர் தமிழைத் தமது அன்றாட வாழ்விற் பெரிதும் பயன்படுத்தும் போதும் அம்மக்களை வசதியானபோது அவர்களது பழைய இன அடையாளத்தைக் காட்டி ஒடுக்க முனைவதையும் நாம் காணலாம். மாக்ஸிய நியாயமோ, மாறாக, ஒவ்வொரு தனி மனிதருக்கும் சமூகப் பிரிவுக்கும் தனது அடையாளத்தைப் பேணும் உரிமையை ஏற்பதோடு அதற்கு வசதி செய்வதையும் சரியானதாகவே கொள்ள இடமளிக்கிறது.

இவ்விடத்து மூர்க்கத்தனமான வரட்டு மாக்ஸியம் பற்றியும் சந்தர்ப்பவாதம் பற்றியும் சிறிது எச்சரிக்க வேண்டும். இவர்களில் ஒரு சாரார், சோஷலிசம் வந்த பிறகு எல்லாமே சரியாகி விடும், எனவே வர்க்கப் போராட்டத்தை விட வேறெதுவுமே முக்கியமானதல்ல என்று தேசிய விடுதலை உட்படப் பல வேறு சமூக முரண்பாடுகளை அப்படியே புறக்கணிக்கிறதை நாம் காணலாம். வரட்டு மாக்ஸியம் மலத்தை விட இழிவானது

7ம் பக்கம் பார்க்க....

நன்றி - நூலகத்திட்டம்



# சாயம் வெளுத்த தமிழரசுக்கட்சி

## தந்தையும் மைந்தரும் (12)

தமிழரசுக்கட்சியின் மொத்த வாக்கு விகிதம் 1970ல் சரிவு கண்டது பற்றி ஒரு வேளை அக்கட்சித் தலைமை எதிர்பார்த்திருக்கலாம். ஆயினும் 'தளபதி' அமிர்தலிங்கத்தின் பாராளுமன்றக் கோட்டை பறிபோனது பறி போனதுதான். வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமிர்தலிங்கத்துக்குக் கிடைத்த அதிர்ச்சியானது அதிகாரத்திமிருக்கு மக்கள் கொடுத்த பலமான அடி அல்லாமல் வேறெதுவுமல்ல.

1965–70 காலகட்டத்தில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற அரசியலில் ஏகாதிபத்தியச் சார்பாக படுபிற்போக்கான நிலைப்பாட்டை எடுத்தது பற்றி முன்பு கண்டோம். யாழ்ப்பாணக் குடாநாட்டு நிகழ்வுகளில் தமிழரசுக் கட்சித் தலைமையின் மனோபாவம் அதே விதமாகவே பிரதிபலித்தது. தமிழரசுக் கட்சிக்கு மாற்றான வலிய தமிழ்த் தேசியக் கட்சி எதுவும் இல்லாத போதும் தமிழரசுக் கட்சியே தேர்தலில் வெல்லும் வாய்ப்பு இடதுசாரிப் பாராளுமன்றவாதிகளின் சீரழிவால் மேலும் வலுவடைந்த போதும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமிர்தலிங்கமும் தமிழ்க் காங்கிரஸ் என்ற பேர்ப் பலகையின் கீழ் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்ட மு. சிவசிதம்பரமும் 1970ல் தேர்தலில் தோல்வியைச் சந்தித்ததற்கான காரணங்களில் அவர்கள் மீதும் வட பகுதி மக்கள், குறிப்பாக அவர்களது தொகுதி மக்கள் கொண்டிருந்த கோபம் முக்கியமானது.

1956 முதல் 1961 சத்தியாக்கிரகம் வரை சிலரால் அமிர்தலிங்கம் பற்றி மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட படிமம் இந்தியாவின் காந்திக்கு நேரு போல ஈழத்தின் பிரதிக்கு இவர் என்ற வகையிலானது. அதை விட மேடைப் பேச்சு வல்லமையும் தமிழரசுக் கட்சியின் கீழ்மட்டத்தில் இருந்த நடுத்தர வர்க்க அரச ஊழியர்கள் போன்றோரிடமும் இளைஞர்களிடமும் சரளமாகப் பேசிப் பழகுகிற ஒருவர் என்பதும் அவருக்குச் சாதகமாக இருந்தன.

ஆயினும் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினரான ராஜதுரையுடனான போட்டியில் அவர் நடத்தை பலரதும் அங்கிகாரத்தைப் பெறவில்லை. சிவசிதம்பரம் என்றுமே வெகுஜன அரசிலில் அதிகம் ஈடுபட்டவரல்ல. அவரது அரசியல் வேலைப்பாணி தமிழ்க்காங்கிரஸ் தமைமலையின் மேட்டுக் குடிப் பாங்கி லேயே இருந்துவந்தது.

1965–70 காலகட்டத்தில் வடக்கின் அரசியல் சாதியத்திற்கு எதிரான எழுச்சியாலேயே முக்கியமாக அடையாளங் காணப் பட்டது. அக்காலத்தில் தொழிற்சங்கப் பிணக்குக்கள் பலவும் தொழில் வழக்காடுமன்றங்கட்கு முன் வந்தன. இரண்டு சூழ்நிலைகளிலும் தமிழரசுக் கட்சி தனது வர்க்க நிலைப்பாட்டை ஐயத்திற்கு இடமில்லாது வெளிப்படுத்தியது எனலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்த பலவேறு சிறு கைத்தொழில் நிறுவனங்களில்



தொழிலாளர்கள் கடுமையாகச் சுரண்டப்பட்டு வந்தார்கள். 1956ல் பண்டாரநாயக அதிகாரத்திற்கு வந்த பின்பு இத்தகைய பல சிறு நிறுவனங்களிற் தொழிற் சங்கங்கள் அமைப்பதற்கான சட்ட வசதி ஏற்பட்டது. மிகுந்த நெருக்கடிகளின் நடுவே கட்டி எழுப்பப்பட்ட இத்தகைய தொழிற் சங்கங்கள்களை சாதியத் திமிரில் ஊறி வளர்ந்த யாழ்ப்பாணத்து முதலாளிகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே வெகு சாதாரணமான நியாயமான கோரிக்கைகட்கும் போராடவும் வழக்குரைக்கவும் தேவை ஏற்பட்டது. பெருவாரியான தொழிற்சங்கங்கள் நா.சண்முகதாசன் தலைமையிலான இலங்கைத் தொழிற்சங்கச் சம்மேளனத்தில் இணைந்திருந்தன. எனவே இந்தத் தொழிற்சங்கப் பிணக்குக்களில் தொழில் வழக்காடு மன்றங்களில் தொழிலாளர் சார்பாக அதிகம் வாதாடியவர் சண்முகதாசனே. அதே பிணக்குக்களில் முதலாளிகள் தரப்பிற் தோன்றியொரில் முக்கியமானவர் தமிழரசுக் கட்சிப் பிரமுகரான மு.ஆலாலசுந்தரமாவார்.

இதே ஆலாலசுந்தரம் 1980களில் கூட்டுறவுச் சங்கப் பண விடயங்களில் ஒழுங்காக நடக்கவில்லை என்பது காரணமாகத் தமிழீழ விடுதலை இயக்கங்கள் சிலவற்றால் கடுமையாக எச்சரிக்கப் பட்டுப் பின்பு கொல்லப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை சாதியத்திற் கொதிரான போராட்டம் ஒரு சட்ட ஒழுங்குப் பிரச்சனையாகத் தெரியவில்லை. 1957ல் சாதிப்பாகுபாட்டுக்கு எதிரான சட்டத்தைப் பிரேரித்தவர் தமிழரசுக் கட்சியின் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் என்று உரிமை கோரிய தமிழரசுக்கட்சி 1957ல் தங்களது தீண்டாமை ஒழிப்பை ஓரிரண்டு சமபந்தி போசனங்களுக்குப் பிறகு துடக்குக் கழித்ததோடு மூட்டைகட்டி வைத்து விட்டது. வடக்கில் பல கோவில்களில் தாழ்த்தப் பட்டோருக்கு அனுமதி மறுக்கப்பட்டே வந்தது. அதை ஒரு பிரச்சினையாக்கிப் போராடுவதற்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்வந்த போதே தமிழரசுக் கட்சியின் சாயம் முற்றாக வெளுத்தது.

அன்று வெளுத்தது தமிழரசக் கட்சியின் சாயம் மட்டுமல்ல. சில இடதுசாரிகளதும் தான். சோவியத் சார்புக் கம்யூனிஸ்ட்டுக்கள் இப்போராட்டத்தை ஆதரிப்பதிற் காட்டிய தயக்கம் மட்டுமல்லாது 'பாட்டாளி வர்க்கப் போராட்டம்' என்ற பேரில் அதைத் தீவிரவாதம் பலாத்காரம் எனவும் தவறான தந்திரோபாயம் எனவும் பல்வேறு விதமாக விமர்சித்ததோடு அப்போராட்டத்தினின்று ஒதுங்கி நின்றனர். சிலர் குழிபறிக்கிற காரியங்களிலும் இறங்கினர். சமாதான சகஜீவனமும் பாராளுமன்ற அரசியலுமே சோஷலிஸ உலகை அடையும் வழி என்று ஏற்றுக் கொண்டவர்கட்கு மக்கள் தங்கள் மீதான கொடும் அடக்குமுறைக்கு எதிராக ஆயுதமேந்தத் துணிவது தவறாகத் தெரிவது இயல்பானது தானே.

இந்த விதமான பசப்பு இடதுசாரித்தனம் தீண்டாமை ஒழிப்புக்கான வெகுசன இயக்கத்தில் பங்குபற்றிய சில இடது கம்யூனிஸ்ட்டுக்களிடமும் இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் வன்முறைப் போராட்டத்தில் இறங்குவதன் முலம் கம்யூனிஸ்ட்டுகள் பெரும்பான்மைச் சமூகமான வேளாளரிடமிருந்து தனிமைப்பட நேரும் என்று அஞ்சினார்கள். ஆயினும் வெகுசன இயக்கத்தில் இருந்த உண்மையான மாக்ஸிய-லெனினியர்கள் இவ்விடத்தில் மிக உறுதியாக நின்று போராட்டப் பாதையை வலியுறுத்தினர். 'சீனசார்பு' கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டத் தலைமையிலும் சிலர் இத்தகைய தளம்பல் நிலையில் இருந்தனர். ஆயினும் கட்சியின் ஏகப் பெரும்பான்மையும் போராட்டத்தையே ஆதரித்தது. இது சரியான முடிவு என்பதைப் போராட்டத்தின் வெற்றிகளும் உயர்ந்த சாதியினர் எனப்பட்டோர் மத்தியிலும் கம்யூனிஸ்ட்டுகள் கண்ட வளர்ச்சியும் நிருபித்தன.

சாதியத்திற்கு எதிரான போராட்டத்தில் சாதித் திமிர் பிடித்தோரை மகிழ்விக்கும் நிலைப்பாட்டை எடுத்தவர்களில் அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் முக்கியமானோர் என்பது மட்டுமில்லாது தமது தொகுதிகளில் கணிசமான அளவில் வாழும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரது ஆதரவில் அது வரை தேர்தல்களை வென்றவர்களுமாவர். அந்த மக்கள் மட்டுமின்றி நியாய உணர்வ கொண்ட உயர் சாதியினரும் இந்தத் திமிர்த்தனத்துக்கு ஒரு நல்ல சாட்டையடி கொடுப்பதற்காக 1970ம் ஆண்டுத் தேர்தலைப் பயன்படுத்தினர். இந்த இருவரும் அடுத்த 1977 தேர்தலில் வேறு தொகுதிகளை நாடிப் போகுமளவுக்கு அந்த அடியின் வலிமை அமைந்திருந்தது. இந்தத் தோல்வியைத் தனக்குக் கிடைத்த தனிப்பட்ட தோல்வியாகக் கருதிய அமிதலிங்கம் தனது செல்வாக்கை மீள நிமிர்த்துவதற்குத் தருணம் பார்த்திருந்தார். ■ ■ ■ ■ ■

## அஷ்ரப்பும் ஆங்கிலத்தின் அதிகாரமும்

அடுத்த ஆயிரவாண்டில் தமிழும் சிங்களமும் பயனற்றுப் போய் வீடுமாம். ஏனெனில் அடுத்த நூற்றாண்டின் மொழி ஆங்கிலமே என்கிறார் அஷ்ரப். அதனால் ஆங்கிலத்தையே நாட்டின் அரசகரும மொழியாக்கித் தமிழையும் சிங்களத்தையும் இணைப்பு மொழியாக்க வேண்டுமெனவும் சண்டே லீடர் என்கிற யூ.என்.பி. சார்பு வாரச் செய்தி ஏட்டுக்கு அவர் கூறியுள்ளார்.

இந்த நாட்டில் தாய்மொழிக் கல்வி மூலமே சிறப்பாகக் கல்வியறிவு பெற்று ஒரு புதிய பரம்பரை உருவானது. 1977ல் யூ.என்.பி. அதிகாரத்திற்கு வந்த பின்பு விதேசிய முதலாளித்துவத்தின் ஆதிக்கம் ஓங்கியதன் விளைவாக மறுபடியும் ஆங்கில மோகம் தலை தூக்கத் தொடங்கியது. பிரேமதாச ஆங்கிலத்தை அரசகரும மொழியாக்கவே தமிழையும் சேர்த்து அரசகரும மொழியாக்கினார் என்பதில் இரகசியமில்லை. ஆயினும் தமிழ் மொழி மூலம் செய்யப்படக் கூடிய எத்தனையோ விடயங்களில் தமிழ் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

சிங்களவர் தமிழ் கற்றோ தமிழர் சிங்களம் கற்றோ இனவாதம் ஒழிந்து விடாது. ஆங்கிலத்திலேயே எல்லாரும் பேசினாலும் அது ஒழிந்து விடாது. ஆயினும் ஆனை பார்த்த குருடர்கள் போல மொழி தான் பிரச்சினை என்று யாரும் வாதிப்பது கடந்த 50 வருட வரலாற்று அனுபவத்தை நிரா்கரிப்பதாகும்.

ஆங்கிலம் பயனுள்ள மொழிதான். ஆயினும் அதை ஒரே அரசகரும மொழியாக்குவது நாட்டின் பெரும்பாலான மக்களை அரசியலுரிமை இல்லாதவர்களாக்கும். ஏனெனில் அதிகார வர்க்கம் ஆங்கிலம் படித்தவர்களையே பெரும்பாலும் கொண்டுள்ளது.

அஷ்ரப் உயர உயர அவரது வர்க்க நோக்கும் மேலே உள்ளவர்களின் நோக்குக்கு நெருங்கி விட்டது.

## நமது அரசும்

6ம் பக்க தொடர்ச்சி..

என மாஓ சேதுங் சொன்னதை நாம் இங்கு நினைவு கூரலாம். வரட்டு மாக்ஸியம் மாக்ஸியமல்ல, அது வாழுகிற மாக்ஸியத்தால் கழித்து விடப்பட்ட வரலாற்று எச்சம். மறுபுறம் தமது வசதிக்காகவும் எசமான வர்க்கங்களுடனும் ஏகாதிபத்தியத்துடனும் சமரசம் செய்வதற்காக ஒடுக்கப்பட்ட மக்களைக் காட்டிக் கொடுக்கிற சந்தர்ப்பவாதப் போக்கு உள்ளது. இதனுடைய மரபு உண்மையில் சமூக ஏகாதிபத்தியம் என லெனின் வருணித்த 'சோஷலிஸ ஜனநாயகவாதத்தின்' மரபு தான். மக்களைக் கவருவதற்காக மாக்ஸிய வேடம் தாங்கி உலாவுகிற இவர்கள் தேசிய இன ஒடுக்கல் என்ற பீட்சை வரும் போது தமது தேசியவாத, சந்தர்ப்பவாத முகங்களை வெளிக்காட்டி விடுகிறார்கள்.

மனித சமத்துவம், சோஷலிஸம், பெண்ணியம், சுற்றாடல், நவகொலனித்துவம், பன்னாட்டு நிறுவனங்கள், சாதியம், சிறுபான்மை மத உரிமையும் மொழி உரிமையும் என்றவாறான ஒவ்வொரு பிரச்சினையிலும் தேசியவாதத்தால் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க இயலாது போகிறது. எங்காவது அது ஒரு சரியான, தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்றால், அது இடதுசாரிச் சிந்தனையால் வழிநடத்தப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டம் ஒன்றன் பின்னணியில் நிகழ்ந்திருக்கக் காணலாம்.

மாக்ஸியர்கள் எப்போதுமே சரியாகத்தான் நடந்துள்ளனர் என்பது எனது வாதமல்ல. உண்மையாக மாக்ஸியத்திற்குத் தேசியம் பற்றிய ஒரு விறைப்பான, நிரந்தரமான நிலைப்பாடு இருக்க அவசியமில்லை. அது தேசிய இனப்பிரச்சினையை அதைவிட அடிப்படையான வர்க்க சமூகக் கண்ணோட்டத்தில் வைத்தே நோக்குகிறது. குறிப்பிட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறுமனே ஒரு தேசிய இனத்தினதோ இன்னொறு தேசிய இனத்தினதோ நோக்கில் அணுகாமல் உலக நிலவரம், உள்நாட்டு நிலவரம், பிராந்திய நிலவரம் போன்ற பல வேறு தளங்களிலும் அதை நோக்கும் தேவை அதற்கு உள்ளது. இதனாற் சில இடங்களில் தவறான நிலைப்பாடுகள் ஏற்பட இடமுண்டு. ஆயினும் இவை திருத்திக் கொள்ள முடியுமானவை.

சுயநிர்ணயம், தேசம், தேசிய இன விடுதலை என்பனவற்றை வெறும் வாய்ப்பாடுகளாக எவரும் சுருக்கிக் கொள்ள இயலாது. அது மாக்ஸியமும் பல்வேறு பரிமாணங்களிலும் பார்வைக்கு உள்ளாக வேண்டும். முரண்பாட்டுக்கு உட்பட்ட மக்கள் மத்திமிலான சினேக முரண்பாட்டுப் பரிமாணமும் ஒடுக்குமுறையாளனான எதிரிக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்குமிடையிலான பகை முரண்பாட்டுப் பரிமாணமும் சீர்துாக்கிப் பார்க்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே தேசிய இனப்பிரச்சினைகட்குப் போர் தவிர்ந்த தீர்வுகளே உகந்தவை என்பது மாக்ஸிய நிலைப்பாடாகிறது. அதேவேளை இனஒழிப்புப் போருக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் உரிமையை மாக்ஸியம் ஏற்கிறது. எதிரி யார்? நண்பன் யார்? என்ற விடயத்தில் மாக்ஸியர்களால் தெளிவாக மக்களையும் உண்மையான இனவெறியர்களையும் வேறுபடுத்திக் காணமுடியும். இங்கே மாக்ஸியம் விடுதலைப் போராட்டம் மக்கள் மத்தியிலான பகையாக வளர்வதைத் தடுப்பதற்கான நடைமுறையை நாடுகிறது. தேசியவாதத்தால் அது இயல்வதில்லை. அது எதிரியின் எதிரி நண்பன் என்ற விதமாகச் சந்தர்ப்பவாதக் கூட்டுக்களை ஏற்படுத்தி ஒரு ஒடுக்குமுறையின் இடத்தில் இன்னொன்றின் வருகையை ஏற்கச் சித்தமாகிறது.

தேசிய நியாயம் என்பது தன்னால் வரையறுக்கப்பட்ட ஒரு தேசிய அடையாளத்தாற் சிறைப்படுத்தப்பட்ட நியாயம். அது அந்தக் குறுகிய எல்லையைத் தாண்ட இயலாதமை அதன் அறத்தின் பலவீனம். தேசிய நியாயம் வலியுறுத்தும் தேசிய நலன் பிற தேசிய இனங்களின் நலிவிலும் அழிவிலும் தன்னை மேம்படுத்துகிற போக்கை ஒட்டியது. தேசிய முரண்பாடுகள் ஓய்வதாயின், தேசியவாதக் கண்ணோட்டத்தில் பிற தேசிய இனங்கள் ஒழிய வேண்டும். போர் இல்லாது இது இயலுமானதல்ல. ஹிட்லர் இவ்வாறான தேசியவாதத்தின் ஒரு உச்சக்கட்ட உதாரணம் எனலாம்.

மாக்ஸிய நியாயம் வர்க்கங்களின் ஒழிவை நாடுகிறது. அது முதலாளிய வர்க்கம் என்ற ஒன்று இல்லாது ஒழீவதை நாடுகிறது. இங்கு முதலாளிகள் என்ற சுரண்டும் வர்க்கம் இருப்பதற்கான நியாயம் ஒழிக்கப்படுகிறதே ஒழியத் தனிமனிதர் ஒழிக்கப்படத் தேவை இல்லை. ஆயினும் உலக முதலாளியம் (அதாவது ஏகாதிபத்தியம்) ஒடுக்கப்பட்ட மக்கள் மீது போரைத் திணிக்கிறது. எனவே ஆயுதமேந்திய போராட்டம் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவை ஆகிவிடுகிறது. ஆயினும் மாக்ஸியம் நாடுகிற தீர்வு மனிதரை மனிதர் சுரண்டவும் ஒடுக்கவும் இடமில்லாத ஒரு சமுதாய அமைப்பு. எனவே இன்றைய சமுதாய அமைப்பே அதன் தாக்குதலுக்குரிய பிரதான இலக்கே ஒழிய எந்தத் தனிமனிதரும் அல்ல. சோஷலிஸம் கம்யூனிஸமாகும் போது முதலாளி வர்க்கம் மட்டும் அழிவதில்லை. பாட்டாளி வர்க்கமும் ஒழிந்து வர்க்க மற்ற ஒரு மனித சமுதாயம் உருவாகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# 60 வருடம் தலைவர் 40 வருடம் எம்.பி 22 வருடம் அமைச்சர்


## தாத்தாமாரும் பேரன்மாரும்

இன்னும் 20 தொடக்கம் 50 வருடங்களில் தோட்டத் தொழிலாளர்கள் எல்லாம் தோட்ட முதலாளிகள் ஆயிடலாம். ஏனென்றால் தோட்டத்தில ஒரு தொழிலாளிக்கு ஒரு பங்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் வருடா வருடம் பங்குகளை வாங்கினால் தோட்டத் தொழிலாளிகள் தோட்ட முதலாளிகள் ஆயிடலாம். இவ்வாறு குறிப்பிட்டவர் வேறுயாருமல்ல. இ.தொ.கா தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தான்.

'அமுது' என்ற சஞ்சிகையின் ஜனவரி மாத இதழுக்கு அளித்த பேட்டியில் அறிவித்துள்ளார். இவ்வாறு தோட்டப் பங்குகள் உலகில் எந்த நாடுகளிலும் வழங்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார். அவருக்கு மலேசியா, கென்யா என்பன இவ்வுலகிலுள்ள நாடுகள் என்பதை மறந்துவிட்டார் போன்று தெரிகின்றது. திறந்த பொருளாதாரத்தின் தொழிலாளிகளை ஏமாற்ற முதலாளிகள் பங்குகளை வழங்குவது ஒன்றும் இலங்கைக்கு புதியவிடயமல்ல. இலங்கை சீமெந்து லிமிடெட் கம்பனி 1984 களில் தொழிலாளிகளுக்கு பங்குகளை வழங்கத் தொடங்கியது என்பதை ஒரு தொழிற்சங்கவாதி என்ற ரீதியில் மறந்து விடமாட்டார். ஆனால் மலேசியாவிலோ, கென்யாவிலோ தோட்டங்களில் பங்குகள் இருந்தபோதும் யாரும் முதலாளிகளாகி விடவில்லை. இலங்கை சீமெந்து லிமிடெட் இப்போ இயங்குவதே இல்லை. தோட்டத் தொழிலாளிக்கு தோட்டக் கம்பனிகள் வழங்கிய பங்குகள் பெறுமதி சிலநூறு ரூபாய்களே ஆகும். தொண்டமானின் சங்கத்தவர்களே தொழிலாளிகளை ஏமாற்றி அவர்களின் பங்குகளை விலைக்கு வாங்கியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

அவர் தோட்டத் தொழிலாளிகளை குடிகாரர்கள் என்று கூறுவது ஒன்றும் புதியதல்ல. கோயிலுக்கு ஒருத்தனும் போறானில்லை. போடான்னா நல்லா குடிச்சுப்புட்டு சன்னதி வந்த மாதிரி ஆடுறான். சாராயக் கடைக்கும் மதுக் கடைக்கும் உழைக்கிறதை செலவழித்து விடுவதாகவும் தோட்டத்தொழிலாளர்களை மிகவும் கேவலமாக குறிப்பிட்டுள்ளார். இ.தொ.கா எம் பிக்களில் எத்தனை பேர் சாராயத் தவறனைகளை நடத்துகிறார்கள் என்பதை அவர் அறிய மாட்டாரா? இ.தொ.கா ஆதரவாளர்களில் எத்தனை பேர் கசிப்பு விற்கிறார்கள் என்பதை அறியாரா? தோட்டத் தொழிலாளிகள் குடிப்பதனாலும், வெள்ளிக்கிழமை கோயிலுக்கு போகாதபடியாலும் தான் சமுக ரீதியாக பின்தங்கி நிற்பதாக கூறி தப்பிவிடப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு முக்கிய பிரச்சினையாக இருக்கிற குடிப்பழக்கத்தை ஊக்குவிப்பதாக இ.தொ.கா தலைவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்பதை அவருக்கு வேறு யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தன்னுடைய அரசியல் விவேகமற்ற கோளாறை மறைத்து மலையக மக்களின் முன்னேற்ற மின்மைக்கு மலையக மக்களே காரணம் என்று குறை காணும் அவரின் இயலாமையை அவர் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார். அதற்காக மலையக மக்கள் அவருக்கு நன்றி சொல்லக்கடமை பட்டவர்களாவர்.



மக்களை இம்சிப்பதற்கு ஆதாரமாக அமைகிற அவசரகால சட்டத்தை நிறைவேற்ற இ.தொ.கா எம்பீக்கள் ஏன் ஆதரவாக வாக்களிகிறார்கள் என்று கேட்டதற்கு அவர் கூறியுள்ள பதில் மிகவும் வேடிக்கையானது. இ.தொ.காவினர் அவசரகாலச் சட்டத்துக்கு வாக்களிக்காவிட்டால் அவர்களை அரசாங்கத்தினர் மதிக்க மாட்டார்கள். இ.தொ.கா



ஆதரிக்காவிட்டால் அச்சட்டம் எப்படியும் தோல்வியடையாது. எதிர்த்து வாக்களித்தால் என்ன பிரயோசனம் ஏற்படப்போகிறது. என்று கூறியுள்ளார். நல்ல பதில்தான். மலையக இளைஞர்கள் சிறைகளில் வாடுவதற்கு காரணமான அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கா விட்டால் அவர்களை அரசாங்கத்தினர் மதிக்கமாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால் மலையக மக்கள் இ.தொ.கா வினை மதிக்காமல் விடுவதற்கு அதுவும் ஒரு காரணம் என்பதை ஏற்க மறுப்பதேன்? வடக்கு கிழக்கிலிருந்து மலையகத்துக்கு வந்து வேலை செய்யும் ஆசிரியர்களை புலிகள் என்று பொலிசார் கைது செய்வதாலேயே இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை கொண்டுவர தீர்மானித் திருப்ப தாக கூறியுள்ளார். இது ஒரு வேடிக்கையான கருத்து என்பதை மலையகத்திலுள்ள சாதாரண தோட்டத் தொழிலாள தாத்தாமாருக்கும் தெரியும், சாதாரண பேரன்மார்களுக்கும் தெரியும்.

அதேவேளை கடந்த டிசம்பர் மாதம் தொழில் திணைக்களத்துக்கு கொடுக்கப்பட்ட விபரங்களின்படி ஏறக்குறைய ஒரு லட்சத்து 15 ஆயிரம் தொழிலாளர்கள் மட்டும் இ.தொ.கா வின் அங்கத்தவர்களாக இருப்பதாக தெரிகிறது. இந்நிலையில் இ.தொ.காவை இன்னும் 60 வருடங்களுக்கு அசைக்க முடியாது என்று கூறியுள்ளார் தொண்டமான். ஏறக்குறை 4 லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தும் இ.தொ.கா விற்கு ஒரு லட்சம் பேர்தான் அங்கத்தினர்கள் என்ற போதும் அதுவே மலையக மக்களின் தனிக்கட்சி என்று தொண்டமான் குறிப்பிட்டுள்ளமை உண்மையை மறைத்துப் பொய் கூறுவதாகவே உள்ளது.

அத்துடன் அவர் வழமையாக கூறிவருவது போன்று சில, புதிய, குட்டிச்சங்கங்கள் ஏதோ காரணத்துக்காக இருக்கின்றன. அவை தன்னுடைய தலைமையை ஏற்று இ.தொ.கா வுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன என்றும் அமுதுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அவரின் இந்த பகிரங்க விளக்கத்துக்குப் பிறகும் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற பேரில் இணைந்துவிட்டதாக குறிப்பிட்டு மகிழ்ச்சியடையும் ஓ.ஏ.இராமையா, டி.அய்யாத்துரை போன்ற குட்டிச்சங்கத்தலைவர்கள் மகிழ்ச்சியடைய காரணம் இருக்குமா? இ.தொ.கா பலவீனமாக இருப்பதாலேயே 11 சங்கங்களை இணைத்துக் கொண்டது என்பதை மறைக்க முயற்சிப்பது தொண்டமானின் சாதுரியமாக இருக்கலாம். அது மலையக மக்களுக்கு மிகவும் வெளிச்சமாகும்.



மேலும் மலையக மக்கள் தனித்துவமான ஒரு தேசிய இனக்குழுவாகக் கருதுகிறீர்களா? என்னும் கேள்விக்கு தொண்டமான் ஆம் என்று சொல்வதற்கு துணிவற்று அதை மறுப்பதாகவே பதில் கூறி உள்ளார். வடக்கு கிழக்கு மக்கள் இப்போ அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டு எப்படி பூர்வீகக்



குடிகள் என்று சொந்தம் கொண்டாட முடியும் என்று கேட்டு சந்திரிகா கூறியது சரியென்பதை மறைமுகமாக ஒப்புக் கொண்டு பூர்வீகக் குடி என்று சொல்லுறதில என்ன இருக்கு என்று கேட்டுள்ளார்? அவ்வாறே மலையக மக்களையும் தேசிய இனக் குழுவாக கருதுவதில் ஒன்றுமே இல்லை என்பதே அவரது பதிலாகும்.

மேலும் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய ஒரு கேள்விக்கு 101 ரூபா சம்பள உயர்வு பெற்றுக் கொடுத்திருக்கிறோம், 25 நாட்கள் வேலைக்கு ஒப்பந்தம் பண்ணியிருக்கின்றோம். வீடு சொந்தமாக்கிக் கொடுத்திருக்கிறோம் அமைச்சு ஒன்று உருவாக்கி பணம் ஒதுக்கி கிராமங்களாக்க இருக்கிறோம். கலை கலாச்சாரம் வளர்க்கிறோம். இவ்வாறு கூறிவிட்டு மலையக மக்கள் தான் ஒன்றுக்கும் சரிவர மாட்டான்கள் என்கிறாங்க என்ற விதமாகப் பதில் கூறி இருக்கிறார்.

இவ்வாறாக தனது பேட்டி முழுவதிலும் தனது ஏமாற்றத் தனங்களை மறைத்து மலையக மக்கள் மீதான குற்றச் சாட்டுக்களையே கொட்டியிருக்கிறார். தானும் தனது குடும்பமும் பேரனும் சுற்றியுள்ள நெருங்கிய பரிவாரங்களும் சொத்து சுகபோக வாழ்வில் ஊறித் திளைத்த கதை யாவற்றையும் மூடி மறைத்தும் உள்ளார். தொண்டமான் அவர்கள் 60 வருசமா தலைவர் என்ற பதவியில், 40 வருசமா எம்.பி என்ற ஸ்தானத்தில், 22 வருசமா அமைச்சர் என்ற கௌரவத்துடன் இருந்து வந்துள்ளார். அது மட்டுமின்றி தான் ஒரு போதும் எதிர்க் கட்சியில் இருக்க மாட்டேன் என்ற நிலைப்பாட்டில் ஒவ்வொரு அரசாங்கத்திலும் அவ்வப்போது பதவியில் உள்ள அரசாங்கத்தைப் புகழ்ந்து போற்றி நின்று வந்துள்ளார். மிக இலகுவாக தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை நிராகரித்து அல்லது முறியடித்தும் வர இவரே உதவியாக இருந்து வந்துள்ளமையை மலையக மக்கள் நன்கு அறிவர். அடுத்த 60 வருஷத்திற்கு இ.தொ.கா தனிப் பெரும் அமைப்பாக இருக்கும் என்ற ஆருடத்தின் அர்த்தம் தனக்குப் பின் பேரன் முடிசூட்டி தலைமை தாங்கிச் செல்வான் என்பதே ஆகும். அந்தளவிற்கு மலையக மக்கள் ஏமாந்து விடுவார்கள் என்றே தொண்டமான் நம்புகிறார். பாவம். அவருக்கு வளர்ந்து வரும் மலையகத்தின் புதிய தலைமுறை எவ்வாறு சிந்திக்கிறது எந்தப் பாதையில் செல்கிறது என்பதைப் பற்றி எல்லாம் கண்டு கொள்ள முடியவில்லை. பணம் அந்தஸ்து அதிகாரம் இவற்றால் மலையக மக்களை ஏமாற்றி தொழிற் சங்கப் பிழைப்பு நடத்திய காலம் மலையேறி விட்டுள்ளது என்பதை அவர் அறிந்து கொள்வதற்கு அதிக காலம் தேவை இல்லை என்றே கூறலாம்.

---

**தொண்டமானின்.....**

1ம் பக்க தொடர்ச்சி

ஏப்ரல் மாதம் மாகாணசபை தேர்தல்கள் நடக்கவிருப்பது தெரிந்ததே.

இந்திய வம்சாவளி மக்களின் தேவைகள் பற்றி இந்திய பிரதமர், இந்திய ஜனாதிபதி போன்றோரிடம் கலந்துரையாடியதாக கூறிய அவர் இந்திய அரசாங்கமும், தமிழக அரசாங்கமும் அவரது கோரிக்கையை பரிசீலிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதையெல்லாம், மலையக மக்கள் நம்புவதற்கு தயாரில்லை. ஏனெனில் ஜே.ஆர்.ஜயவர்த்தன முதல் சந்திரிகா வரை எல்லா ஜனாதிபதிகளும் அதை செய்வார்கள் இதை செய்வார்கள் என்று கூறி மலையக மக்களை தொண்டமான் தொடர்ந்து ஏமாற்றி வந்தார். இனியும் அவ்வாறு ஏமாற்ற முடியாது.

அதனால் இப்போது இந்தியா மலையக மக்களுக்கு வெட்டிக் கிழிக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

காலத்துக்காலம் தேர்தல் வரும் போது ஏதாவது ஒரு குண்டைப் போடுவதும், ஏதாவது சம்பவங்களை நிகழ்த்தி மலையக மக்களை ஏமாற்றுவதும் மலையக தலைவர்களுக்கு மிகவும் தேர்ச்சியான அரசியல் விளையாட்டாகி விட்டது.

டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலை ஊழியரை தாக்கிவிட்டு, அவர் இனவாதி என்றும் அதனாலேயே அவரை தாக்க வேண்டிய நிலைஏற்பட்ட தாகவும் இ.தொ.கா. விலுள்ள சிலர் கதை கட்டிவிட்டுள்ளனர். குடிவெறியினால் செய்யும் காடைத்தனங்களை எல்லாம் சமூகத்திற்கான சேவையாகக் காட்ட முயற்சிக்கின்ற கேவலத்தை மலையக மக்கள் எப்படி நம்புவார்கள்.

இனவாதத்துக்கு எதிராக நேர்மையாக அரசியல் செய்வதென்றால், சாதாரண ஊழியர்களை தாக்கிப் பயனில்லை. இ.தொ.காவும் தொண்டமானின் பேரனும் கைக்கோர்த்துக் கொண்டிருக்கும் சிங்கள அரசியல் தலைவர்களில் எத்தனை பேர் இனவாதமற்றவர்கள் என்பதை வெளிப்படையாக கூறவேண்டும். ஏற்கனவே கூடிக்குலாவிய ஐ.தே.கட்சி இனவாத கட்சியில்லையா? தற்போது உறவு வைத்திருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இனவாதம் இல்லையா? இனவாதத்துக்கு எதிராக அரசியல் செய்வதாயின் முதலில் பேரினவாத கட்சிகளுக்கு ஆதரவு கொடுப்பதை நிறுத்த வேண்டும். மலையக மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக 'இந்திய வம்சாவளி மக்கள் பேரணி' என்ற பேரில் தேர்தலில் போட்டியிட்டாலும் இறுதியில் பேரினவாத கட்சிகளின் காலை கட்டிப் பிடித்தே தமது சொந்த காரியங்களை செய்யமாட்டார்கள் என்று வெளிப்படையாக கூறுவதுடன் நடந்தும் காட்டுவார்களா?

தொண்டமானுக்கு பதிலாக புதிய தலைமைகளை கட்டி வளர்க்கப் போவதாக கூறிய சந்திரசேகரனும் பத்திரிகை அறிக்கைகளின் மூலம் மக்களை ஏமாற்றும் குண்டுகளை போடுவதை தொழிலாகக் கொண்டுள்ளார். தனது சங்கத்தையே கட்டிக் காக்க முடியாதவர், மாற்றுத்தலைமையை எவ்வாறு தரப்போகிறார். அதிகாரப் போட்டி பதவிப்போட்டி பணப்போட்டி என்பவற்றால் அவரது சிறிய சங்கமும் சின்னாபின்னமாகி யுள்ளது. தொண்டமானின் வழியிலேயே பயணம் செய்யும் அவரின் முடிவும் தொண்டமானுக்கு ஏற்பட்டிருக்கும் முடிவைப் போன்றே அமையும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

எனவே அரசியல் அதிகாரம், பணபலம் என்பவற்றை கொண்டு மலையக மக்களை அணுகி தேர்தல் குண்டுகளை போடும் மக்கள் விரோத அரசியல் தலைவர்களுக்கு மலையக மக்கள் தகுந்த நேரத்தில் தகுந்த பாடத்தை படித்துக் கொடுப்பார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



## அக்கம் பக்கம் ஐ.ஐ.ஓ

# கொண்டாட்டங்கள் தொடரட்டும்

எல்லா விதங்களிலும்–நாகரிகத்திலும் பண்பாட்டிலும்–மேம்பட்டவர்களாகிய தமிழ் மக்களிடம் ஒரு பெருங்குறை உள்ளது. திருமணம், செத்தவீடு முதலியவற்றின் பொருட்டுப் பெருஞ் செலவு செய்து தம்மிடமுள்ள பொருட் செல்வத்தை அழித்து விடுவது தான் அந்தப் பெருங்குறை, இந்தக் கருத்துப்பட ஒரு சரித்திரப் பாடப்புத்தகத்திலே அதன் ஆசிரியர் எழுதியுள்ளார். ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு முன்பு தெரிவிக்கப்பட்ட கருத்து. இன்றுங் கூட இது உண்மையாகத் தான் இருக்கிறது.

வீட்டுக் கொண்டாட்டங்களும் விழாக்களும் ஒரு புறமிருக்க, கோயில் திருவிழாக்களுங்கூட அந்தக் காலத்திலே சதிர்க் கச்சேரி, வாண வேடிக்கை, குடிவெறியாட்டம், கூத்துக் கும்மாளங்களுடன் தான் நடைபெற்று வந்தன. இந்தக் காலத்திலோ என்றால், கொண்டாட்டங்கள், விழாக்களின் பரிமாணங்கள் மிகவும் பெருகிப் பிரமாண்டமாகி மக்களின் சேமிப்புகளையும் கையிருப்புகளையும் விழுங்கி வருகின்றன. தங்கள் கைக்கு வந்து சேர்ந்து மிஞ்சும் பணத்தை எப்படிச் செலவு செய்வது என்று தெரியாமல், புதிய புதிய வழிமுறைகளைத் தேடி ஓடும் போக்கினராகவும் நம்மிற் சிலர் உள்ளனர். சேமிப்புகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் எண்ணங்களோ எதிர்பார்ப்புகளோ நம்மிடம் குறைவு. மாறாக, அற்ப சொற்பமான சேமிப்புகளையும் வீணான நுகர்வுப் பொருள்களின் பொருட்டு அள்ளி வாரி இறைத்தும் எரித்துப் புகைத்துக் கரியாக்கியும் அழித்துவிடும் போக்கே நம்மவரிடம் இன்று பெரும்பாலும் காணப்படுகிறது.

நுகர்ச்சி நாட்டத்தையும் மோகத்தையும், கண்மூடித்தனமான–சில வேளைகளிலே அசட்டுத் தனமான–ஆசைகளையும் விருப்பார்வங்களையும் அவாக்களையும் கிளப்பி விடுவதிலும் ஏற்பட்டு வரும் வணிகப் போட்டிகள் கொஞ்ச நஞ்சமல்ல. பன்முகப்பட்டு வளர்ந்து வரும் பத்திரிகை, ஒலிபரப்பு, ஒளிபரப்புத் தொழில்கள் விளம்பரத் தந்திர உத்திகளுக்குப் பாலூட்டி வளர்த்து வருகின்றன. இவைகளெல்லாம் பெருவணிகத்தின் கைத்துணைகள் என்பது நுணுகி நோக்குவோர்க்கு மட்டுமே விளங்கும். ஆனால், பெருவணிகத் துறைகள் தம்மிடையே போட்டி போடுவதுடன் நிறுத்திக் கொள்வதில்லை. சமூகத்தில் நிலவும் போட்டி மனப்பான்மைக்கும் எரிச்சல் பொறாமைகளுக்கும் கழுத்தறுப்பு மனச்சாய்வுகளுக்கும் வீம்புகளுக்கும் தூபம் போடுவது கண்கூடு.

விழாக்கள், கொண்டாட்டங்கள் நடத்துவதிலும் போட்டா போட்டிகளும் 'காட்டாக்குஸ்திகளும்' கணிசமான பங்களிப்புகளைச் செய்கின்றன. ஏற்கனவே, இந்த நாட்டவரிடம் தாராளமாக இருந்து வந்த விழா மோகம், இன்று புதுப்புது வழிகளில் விரிவாக்கம் பெற்று வருகிறது. விழாக்கள் எண்ணிக்கையிலும் அளவிலும் பல்கிப் பெருகுகின்றன. முன்பு குடும்ப மட்டத்திலே சாமத்திய வீடு, கலியாண வீடு. சவுண்டி, கிருத்தியம் என்று சிற்சில சடங்குகள் முதன்மை பெற்றிருந்தன. இன்றோ, இவற்றுடன் கூட, ஊர் விழாக்கள், வட்டார விழாக்கள், மாகாண விழாக்கள், தேசிய விழாக்கள் என்று பற்பல போட்டிகள், கொண்டாட்டங்கள், கவுரவிப்புகள், பரிசளிப்புகள், விருந்தளிப்புகள் குட்டி போட்டுக் குஞ்சு குருமான்களுடன் பரவலாகி வருகின்றன.

அத்துடன் இந்தக் கொண்டாட்டங்களுக்கு வேண்டிய குறிக்கோள்கள், இலட்சியங்கள், நோக்கங்கள், தொனிப் பொருள்களும் விரைந்து பெருகிக்கொண்டே போகின்றன. அந்த விதத்திலும் ஒரு குறைச்சலும் இல்லை. சிறுவர் தினம், முதியோர் தினம், ஆடவர் தினம், மகளிர் தினம், ஊனமுற்றோர் தினம், உடல்வலு மிக்கோர் தினம், எயிட்ஸ் தவிர்ப்புத் தினம், குடி குறைப்புத் தினம், போதைப்பொருள் தடுப்புத் தினம், மனித உரிமைத் தினம், மிருகவதை விலக்குத் தினம், வனவளப் பெருக்கத் தினம், சூழல் தூய்மைத் தினம், உடலுறுதித் தினம், உளநலப் பாதுகாப்புத் தினம், சுகாதாரத் தினம், தொற்று நீக்குத் தினம்–என்றவாறு சர்வதேச தினங்களும் குப்பை குப்பையாகக் குவிந்து கிடக்கின்றன. இந்தத் தினங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கொண்டாட்டம், ஒவ்வொரு பாட்டுப்போட்டி, ஒவ்வொரு கட்டுரைப்போட்டி, ஒவ்வொரு பேச்சுப்போட்டி, ஒவ்வொரு கூத்துப்போட்டி, ஒவ்வொரு கும்மிப்போட்டி. பிறகு அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பரிசளிப்பு விழா.

இந்தப் போட்டிகளையும் விழாக்களையும் ஒழுங்கு செய்து நடத்துமாறு தூண்டுவதற்கு தனியான ஆட்கள் இருக்கிறார்கள். இவற்றுள்ளே, கணிசமானதொரு தொகைக் கொண்டாட்டங்களுக்குப் பின்னால் நிற்கும் 'தொண்டர்கள்' அரசு சாரா நிறுவனங்கள் அல்லது என்.ஜி.ஓக்கள் எனப்படும் தன்னார்வக்குழுக்களைச் சார்ந்தவர்கள். இந்தத் தொண்டர்கள் இங்கு சில செயல் திட்டங்களை நிறைவேற்றும் கடப்பாட்டையும் பொறுப்பையும் கொண்டவர்கள், அதாவது இந்நத் தொண்டுகளுக்கு, நிதிமூலங்களாக விளங்கும் தாய் நிறுவனங்களுக்கு, நிறைவேற்றப்பட்ட தொண்டுகள் பற்றி அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டியவர்கள். மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள், கருத்திட்டங்கள், நுண்கருத்திட்டங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன? எதிர்பார்க்கப்படும் பலன்கள் கிடைக்கின்றனவா? பயனாளிகளுக்குக் கிடைத்த நன்மைகள் உருப்படியானவையா, உண்மையானவையா? இவை பற்றி எல்லாம் அந்த நிதிமூலத் தாய் நிறுவனங்கள் அவ்வளவாக அலட்டிக்கொள்வதில்லையாம். ஒரு செப்பமான, செவ்வையான, நன்கு தயாரிக்கப்பட்ட அறிக்கை அவர்களுக்குப் போதுமாம் பயனாளிகள் பெற்ற நலன்களை அவர்களைக் கொண்டே 'மதிப்பீடு' செய்வது கூட அப்படி ஒன்றும் கடினமானதல்ல. தக்க முறையிலே தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்களை அவர்களிடம் கையளித்து அந்த வினாக்களுக்கான மாற்று விடைகளையும் கொடுத்து அவற்றுள் மிகவும் பொருத்தமான ஒன்றுக்கு அடையாளம் போடும்படி கேட்டால், பயனாளிகள் போட்டுக் கொடுப்பார்கள். விடைகளை 'உரிய முறைப்படி' பகுப்பாய்வு செய்தால், நல்லதொரு திட்ட நிறைவேற்ற மதிப்பீட்டைப் பெற்று விடலாம். இன்னும் எத்தனையோ சுளுவான வழிமுறைகள் இருக்கின்றனவாம்.

"ஆமை பிடிப்போர் மல்லாத்துவர் நாமது சொன்னால் பாவம்"

இந்த மாதிரியான தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் எடுத்த எடுப்பிலே போய் நுழைவது பள்ளிக்கூடங்களில். ஏனென்றால், போட்டிகளிலே பங்குபற்றி ஆடவும் பாடவும் பள்ளிப்பிள்ளைகள் தான் வாய்ப்பான பிராணிகள். அவர்களைப் போட்டி போட வைத்தால், கொண்டாட்டங்களை வெற்றிகரமாக நடத்தி முடிக்கலாம் அல்லவா? அதிபர்கள் தொடக்கம் பணிப்பாளர்கள் வரை உள்ள அதிகாரிகள் எல்லாரும், கொண்டாட்டங்களுக்கு மதிப்பையும் பரிசளிப்பையும் பெற்றுத் தருவார்கள். பிறகென்ன? வெற்றி நிச்சயம்!

இந்த வகையைச் சேர்ந்த தொண்டு நிறுவனப் பிரதி நிதி ஒருவர், விடயங்களை ஊடுருவிப் பார்க்கும் பணிப்பாளர் ஒருவரை அணுகியிருக்கிறார். பணிப்பாளர் சொன்னாராம்– "என்ன, ஐசே! உங்களுக்கெல்லாம் காலம் நல்ல குசாலாய்ப் போகும்! எல்லாப் பணித் திட்டங்களையும் பள்ளிக்கூடத்திலே நடத்துங்கோ நாங்கள் நிறைவேற்ற வேண்டிய கற்பித்தல் திட்டங்கள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும்"

தொண்டர் பிரதிநிதி ஒன்றும் பேசவில்லை, மவுன் மாகத் திரும்பிப் போய்விட்டார்.

ஆனால், இப்படிப்பட்ட ஒரு கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து நின்று பிடிக்க முடியுமோ, நம்முடைய கட்டமைப்புகளிலே? என்ன காரணமோ தெரியாது, அதற்குப் பிறகு அந்தப் பணிப்பாளர் அதிகநாள் தம்முடைய உத்தியோகத்திலே நின்று பிடிக்கவில்லை. அது வேறு கதை.

விழாக்கள் கொண்டாட்டங்கள் எல்லாம் வீணானவை என்று ஒரேயடியாகக் கழித்துத் தள்ளிவிட முடியாது. ஆனால் எதைக் கொண்டாடுவது, எதைப் பாராட்டுவது என்ற பகுப்புணர்வையே சில விழா அமைப்பாளர்களிடம் காணமுடிவதில்லை. அண்மையிலே ஒரு பத்திரிகைச் செய்தி: இரண்டு பெரியவர்கள் ஒரு விழாவிலே கவுரவிக்கப்பட்டார்கள். ஏன் தெரியுமா? தம் முதுமைப் பருவத்திலே கூட, அவர்கள் தம் குடிப்பழக்கத்தைக் கைவிட்டு விட்டனராம்! இந்தக் கவுரவிப்பு விழாவை ஏற்பாடு செய்த தொண்டு நிறுவனம் எவ்வளவு உன்னதமான அரும்பணியைச் செய்துள்ளது!

அந்தப் பெரியவர்கள் அடிக்கடி குடிப்பழக்கத்துக்கு மீண்டு சென்று அடிக்கடி, மறுபடியும் மறுபடியும், அந்தப் பழக்கத்தைக் கைவிடுவார்களாக. அடிக்கடி கவுரவம் கிடைக்கும். சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும் பிழைத்துக் கொள்வார்கள். ■

# கம்யூனிஸ்டுகள்

## தோழர் மா ஓ

கம்யூனிஸ்ட்டுகள் பெரும் பான்மையான மக்களிடமிருந்து தம்மைத் தாமே பிரித்துக் கொள்ளவோ, ஒரு தனிமைப்பட்ட, மூர்க்கத்தனமான முன்னேற்றத்தில் முற்போக்கான ஒரு சில படைப்பகுதிகளுக்கு மாத்திரம் தலைமை கொடுத்து பெரும் பான்மையான மக்களைக் கைவிட்டுவிடவோ கூடாது. பதிலுக்கு முற்போக்கானவர்களுக்கும் பரந்துபட்ட மக்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். பெரும் பான்மையின் சார்பில் சிந்திப்பது என்பதன் அர்த்தம் இதுவே.

**"தேசிய யுத்தத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர் 1938)**

கம்யூனிஸ்டுகளாகிய நாம் விதை போன்றவர்கள், மக்கள் மண் போன்றவர்கள். செல்லுமிடமெங்கும், நாம் மக்களுடன் ஐக்கியப்பட்டு, அவர்கள் மத்தியில் வேர் ஊன்றி, மலர வேண்டும்.

**"சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி"**
**(17, அக்டோபர். 1945.)**

எந்த ஒரு விஷயத்திலும் கம்யூனிஸ்டுகளாகிய நாம் மக்களுடன் இரண்டறக் கலக்க வேண்டும். நமது கட்சி உறுப்பினர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் வீடுகளுக்குள் கழித்து, ஒரு போதும் உலகத்துக்கு முகம் கொடுக்காமலும் புயல்களை எதிர்நோக்காமலும் இருந்தால், சீன மக்களுக்கு அவர்களால் என்ன பயன்? ஒன்றுமேயில்லை. அத்தகைய நபர்கள் கட்சியுறுப்பினர்களாய் இருப்பது அவசியமற்றது. கம்யூனிஸ்டுகளாகிய நாம் உலகுக்கு முகம் கொடுக்க வேண்டும். புயல்களை எதிர்நோக்க வேண்டும். உலகம் என்பது வெகுஜனப் போராட்டப் பேருலகாகும். புயல் என்பது வெகுஜனப் போராட்டப் பெரும் புயலாகும்.

**"ஸ்தாபனரீதியில் அணிதிரள்க"**
**(29. நவம்பர். 1943.)**

கம்யூனிஸ்டுகள் ஆதர்சமான முன்னணிப்படையின் பாத்திரத்தை வகிப்பது ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்தது. 8வது மார்க்க இராணுவத்திலும் புதிய 4வது சேனையிலும் கம்யூனிஸ்டுகள் எல்லாரும் துணிகரமாகப் போரிடுவது, கட்டளைகளை அமுல் நடத்துவது, கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது, அரசியல் வேலையில் ஈடுபடுவது, அக–ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பது ஆகியவற்றில் ஒரு ஆதர்சமாக விளங்க வேண்டும்.

**"தேசிய யுத்தத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938.)**

கம்யூனிஸ்டு ஒருவர், தான் மட்டும் எல்லாவற்றிலும் மேலானவர், பிறர் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற அகங்கார எண்ணம் படைத்தவராகவோ அல்லது இறுமாப்புடையவராகவோ இருக்கக் கூடாது. அவர் தனது சிறிய அறையில் இருந்து கொண்டு, ஜம்பம் அடிக்கவோ, புழுகிக் கொட்டவோ, அல்லது பிறர் மீது ஆதிக்கம் செலுத்தவோ கூடாது.

**"ஷென்ஸி-கான்ஸீ-நிங்ஷியா எல்லைப் பிரதேச பிரதிநிதிகள் சபைச் சொற்பொழிவு"**
**(21. நவம்பர். 1941)**

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் கட்சிக்கு வெளியிலுள்ள மக்களின் அபிப்பிராயங்களைக் கவனமாகக் கேட்க, அவர்களுக்குத் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். அவர்கள் சொல்வது சரியாய் இருந்தால், நாம் அதை வரவேற்க வேண்டும், அவர்களுடைய பலமான அம்சங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அது தவறாக இருந்தால், அவர்கள் சொல்வதைப் பூரணமாகச் சொல்ல விட்டு, பின்னர் அவ்விஷயங்கள் பற்றி அவர்களுக்குப் பொறுமையோடு விளக்க வேண்டும்.

**"ஷென்ஸி-கான்ஸீ-நிங்ஷியா எல்லைப் பிரதேச பிரதிநிதிகள் சபைச் சொற்பொழிவு"**
**(21. நவம்பர். 1941)**

வேலையில் தவறு இழைத்த எந்த ஒரு நபர் மீதும் கம்யூனிஸ்டுகள் கடைப்பிடிக்கும் மனோபாவம், அவருக்கு அறிவுரை கூறி, அவர் மாறுவதற்கு, புதிய தொடக்கத்தை எடுப்பதற்கு உதவி செய்யும் ஒன்றாகும். அவர் திருத்த முடியாதவராயிருந்தாலொழிய அவரை நாம் விலக்கக் கூடாது.

**"தேசிய யுத்தத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938.)**

கம்யூனிஸ்டுகள் படிப்பில் ஒரு ஆதர்சமாயிருக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதும் மக்களின் ஆசிரியர்களாக விளங்கும் அதே வேளையில் அவர்களுடைய மாணவர்களாகவும் இருக்க வேண்டும்.

**"தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938)**

அரசியல் ரீதியில் பின்தங்கியவர்களைப் பொறுத்தவரையில், கம்யூனிஸ்டுகள் அவர்களை மரியாதையீனமாக நடத்தவோ, இகழவோகூடாது, பதிலுக்கு அவர்களுடன் நேசம் கொள்ள வேண்டும், ஐக்கியப்பட வேண்டும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, அவர்கள் முன்னேறுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

**"தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்"**
**(அக்டோபர். 1938)**

நமது நிலைப்பாடு பாட்டாளி வர்க்கத்தின் பரந்துபட்ட மக்களின் நிலைப்பாடு. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் இது கட்சியின் நிலைப்பாட்டில் நிற்பது கட்சி உணர்வில் கட்சிக் கொள்கையில் நிற்பது என்று அர்த்தமாகும்.

**"யென் ஆன் கலை இலக்கிய கருத்தரங்கு உரை"**
**(மே. 1942)**

நன்றி - நூலகத்திட்டம்



# சர்வதேச அரங்கில்

## ஈராக்: யாருக்குத் தண்டனை

ஈராக் அரசு ஒரு கொடிய சர்வாதிகார அரசு என்பதில் நமக்கு எதுவித ஐயமும் வேண்டாம். அந்த அரசை வலுப்படுத்துவதிலும் அதை ஈரானுக்கு எதிரான ஒரு போரில் முடுக்கி விடுவதிலும் அமெரிக்கா பிரித்தானிய ஆட்சியாளர்கள் 1970களின் முடிவு தொட்டு ஆற்றி வந்த பங்கு பற்றியும் நமக்குச் சந்தேகம் வேண்டாம். 1990ல் ஈராக் குவைத் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்த போதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு மாறியது. அப்போதுங் கூட ஈராக் குவைத்துடன் எல்லைத் தகராற்றுக்குரிய பகுதியைப் மட்டுமே பிடிக்கும் என்ற கருத்திலேயே அமெரிக்க அதிகார நிறுவனம் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. குவைத் முழுவதையும் ஈராக் கைப்பற்றும் என்ற சந்தேகம் அமெரிக்காவிற்கு இருந்திருந்தால் அது முதலில் இருந்தே வேறு விதமாக அங்கு நடந்து கொண்டிருக்கும்.

ஈராக்கின் ஆக்கிரமிப்பை முறியடிப் பதற்காக ஐ.நா. சபையின் பொதுச் சபையிலும் பின்னர் பாதுகாப்புச் சபையிலும் பெறப்பட்ட அதிகாரம் முற்றிலும் தவறான முறையிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் பயன்படுத்தப் பட்டது. அமெரிக்க ஆட்சியாளர்கள் ஈராக்கின் சர்வாதிகார ஆட்சியை அன்றும் ஒழித்துக்கட்ட விரும்பவில்லை. ஏனெனில் சதாம் ஹுஸேனின் வீழ்ச்சி அன்று ஈரான், சிரியா ஆகிய நாடுகளின் செல்வாக்கை மேற்கு ஆசியாவில் மேலும் உயர்த்துவதோடு அமெரிக்காவின் தயவில் ஆளுகிற அரபு முடியாட்சிகளையும் பலவீனப்படுத்திவிடும் என அமெரிக்காவும் அஞ்சியது. எனவே அதன் தேவை ஈராக்கைத் தனக்கு ஏற்ற அளவுக்குப் பலவீனப்படுத்து வதை விட வேறு எதுவுமில்லை. ஈராக்கில் அமெரிக்காவுக்கு உடன்பாடான ஒரு கைப்பாவை அரசாங்கத்தை நிறுவும் வாய்ப்பு இருக்கவில்லை. ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஈராக் மீது திணித்த வியாபாரத்தடையும் ஒருதலைப் பட்சமாக ஈராக் தனது பிரதேசத்தின் வடக்கிலும் தெற்கிலும் இரு பகுதிகளின் மேலாக விமானங்களைப் பறக்க விடாது என்று தடுக்கும் ஆணையும் மிகவும் தவறானவை.

முன்னது மனிதாபிமானமற்றது. பின்னது சர்வதேசச் சட்டத்திற்கு முரணானது. வியாபாரத்தடையை நீக்குவதற்கான முன் நிபந்தனை யாக பேரழிவு ஆயுதங்களை ஈராக் சேகரிப்பதையும் உற்பத்தி செய்வதையும் நிறுத்துமாறு ஆணையிடப்பட்டது. இதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பேரில் ஒரு பரிசோதனைக் குழு நியமிக்கப்பட்டது. இதில் பெரும்பாலானோர் அமெரிக்கர்கள், அடுத்தளவில் பிரித்தானியர், இதன் தலைமையில் இருந்த றிச்சட் பட்லர் என்பவர் அமெரிக்க அரசியல் நோக்கங்கட்காகச் செயற்படுபவர் என்று காரணங் காட்டி அவருடன் ஒத்துழைக்க ஈராக் அரசு மறுத்தது. பல சந்தர்ப்பங்களில் ஈராக் அரசின் சுயாதிபத்தியத்தை மறுக்கும் முறையில் இக் குழு விடுத்த கோரிக்கைகளால் விசாரணைகள் தடைப்பட்டன. இதன் விளைவான நெருக்கடி சென்ற ஆண்டு முற்பகுதியில் ஐ.நா. பொதுச் செயலாளரான கோஃபி அனான் குறுக்கிட்டதன் மூலம் சமரசமாகத் தீர்க்கப்பட்டது. ஆயினும் அமெரிக்காவின் திமிர்த்தனமான போக்கு தொடர்ந்தே வந்தது. பரிசோதனைக் குழுவின் நடத்தை பற்றித் தொடர்ந்தும் ஈராக் குற்றஞ்சாட்டியது. சென்ற வருடம் நொவெம்பர் முடிவில் ஈராக் போதிய ஒத்துழைப்பத் தரவில்லை என்ற பேரில் பரிசோதனைக் குழு தானாக வெளியேறியது. பரிசோதனைக் குழுவினர் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஈராக் கடுமையாகக் குற்றஞ் சாட்டியது.

அமெரிக்காவின் அதிகார வலிமையைக் காட்டவும் பில் கிளின்ற்றனின் பாலியல் ஒழுங்கீனங்கள் பற்றிய அமெரிக்கப் பாராளுமன்ற விசாரணையி லிருந்து அமெரிக்க மக்களின் கவனத்தைத் திசை திருப்பவும் அமெரிக்க அரசும் அதன் தலையாட்டிப் பொம்மையாகவே நடந்துவரும் பிரித்தானிய அரசும் ஈராக் மீது டிசம்பரில் ஏவுகணைத் தாக்குதலும் விமானத் தாக்குதலும் தொடுத்தன.

இக்தாக்குதல்கட்கான இலக் குக்கள் ஐ.நா. பரிசோதனைக் குழுவின் உறுப்பினர் சிலரது உளவு நடவடிக்கைகளது விளைவாகவே தீர்மானிக்கப்பட்டன என்பதை அமெரிக்க நாளேடான வோஷிங்ற்றன் போஸ்ற் பத்திரிகை வெளிப்படுத்திச் செய்தி பிரசுரித்தது. இக் குற்றச்சாட்டை அமெரிக்க ஆட்சியாளர்களும் ஐ.நா. பொதுச் 'செயலாளரும் மறுத்த போதும், வோஷிங்ற்றன் போஸ்ற் மேலும் விவரங்களை வெளியிட்டுத் தன் செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது. இது ஈராக்கின் குற்றச்சாட்டுடன் மிகவும் உடன்பாடானது.

அமெரிக்காவின் ஒன்பது வருட யுத்த நடவடிக்கையின் விளைவாக ஈராக்கில் அதிகம் பாதிக்கப்பட்டோர் முதியோரும் நோயாளிகளும் சிறுவர்களுமே. போஷாக்கின்மை ஒரு பாரிய பிரச்சினையாகியுள்ளது. அமெரிக்காவின் சில ஏவுகணைகளில் கதிர் வீச்சுடைய யுரேனியம் சேர்க்கப்பட்டு இருந்ததால் அதன் விளைவாகக் கதிர்வீச்சை உள்வாங்கிய உணவுப் பயிர்களில் நோய்கள் உண்டாயின எனவும் இதனால் புற்றுநோய் வகைகள் முன்கண்டிராத அளவில் ஏற்பட்டுள்ளன எனவும் ஆதாரபூர்வமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் இதுவரை அது பற்றி எதுவித நடவடிக்கையும் உலகநாடுகளால் எடுக்கப்படவில்லை.

அமெரிக்காவின் அண்மைய தாக்குதலின் விளைவாக ஈராக் பற்றிய அதன் அயற்கொள்கை மிகவும் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளது. சதாம் ஹுசேனின் செல்வாக்கு ஈராக்கினுள் மட்டுமின்றி மத்திய கிழக்கு முழுவதிலும் பெருமளவுக்கு வளர்ந்து உள்ளது. எனவே அமெரிக்காவால் தண்டிக்கப்பட்டோர் யாரென்று பார்த்தால் அது ஈராக்கிய அதிகார வட்டத்தினர் அல்ல என்று தெரிய வரும். கடந்த ஒன்பது வருடங்களில் சதாம் ஹுசேன் கும்பல் தனது அரசியல் எதிரிகளையும் முன்பிருந்தே தனது அரசியல் ஒடுக்குமுறைக்குப் பாத்திரமான தேசிய சிறுபான்மையினரையும் முன்னைவிடக் கூடிய அளவில் ஒழித்துக்கட்டியுள்ளது. மக்கள் மீதான பொருளாதாரச் சுமைகள் வளர்ந்துள்ளன.

சதாம் ஹுசேனை முறியடிக்கக் கூடிய ஒரு வெகுஜன சக்தி திரண்டெழு வதை சதாம் ஹுசேன் மட்டுமல்லாது அமெரிக்காவும் விழும்பவில்லை என்பதே உண்மை. சதாம் ஹுசேனின் ராணுவ வலிமை அளவு மீறாமல் உள்ள வரை, மத்திய கிழக்கில் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு அந்த 'வில்லன்' மிகவும் பயனுள்ளவன்.

அமெரிக்காவுக்கு முற்றிலும் நம்பகமானதும் ஈராக்கிய மக்கள் மீது பூரண அதிகாரம் செலுத்த வல்லதுமான ஒரு மாற்றுச் சக்தி உருவாகாத வரை அமெரிக்கா–சதாம் விளையாட்டுத் தொடரும். உயிர் போகிறது என்னவோ ஈராக்கின் பொது மக்களுக்குத் தான்.

## அடுத்தது பூட்டான்

இந்தியா என்ற துணைக்கண்டம் அதன் இன்றைய வடிவில் ஒரு நாடாக அமைவதற்குப் பிரித்தானிய ஏகாதிபத்தியக் குறுக்கீடு தான் பிரதான காரணம். அதே பிரித்தானிய ஏகாதிபத்தியமே இந்திய–பாகிஸ்தான் பிரிவினைக்கும் காரணமானது. எனினும் இந்திய ஆட்சியாளர்கள் கடந்த ஐம்பது வருடங்களாகத் தமது பழைய எசமானர்களது சாம்ராஜ்யக் கனவைப் பேணி வந்துள்ளனர்.

திபெத்தில் நிலவுடமையாளர்களது கையாளான தலாய்லாமாவைச் சீனாவுக்கு எதிரான ஒரு சக்தியாக ஊக்குவித்ததில் திபெத்தின் மீது அதிகாரம் கிட்டாது போனது பற்றிய இந்திய அதிகாரவர்க்கத்தின் ஆதங்கத்துக்கும் ஒரு பங்குண்டு.

இந்தியா தனது எல்லையில் இருந்த சிக்கிம், பூட்டான், நோபாளம் ஆகிய மூன்று நாடுகள் மீதும் தனது ஆதிக்கத்தை நேரடியாகவே செலுத்தி வந்தது. இந்திய சோவியத் பாதுகாப்பு உடன்படிக்கையை யடுத்து நடந்த முக்கிய நிகழ்வுகளில், 1974ல் சிக்கிம் இந்தியாவில் இணைக்கப்பட்டது ஒன்று.

இந்திய நெருக்குவாரத்திற்கு ஈடுகொடுப்பதில் நேபாள ஆட்சியாளர்களது தடுமாற்றத்தின் விளைவாக மக்களின் கோபம் அதிகரித்து வந்துள்ளது. இன்று நேபாளத்தில் இந்திய எதிர்ப்புணர்வு மிக ஓங்கியுள்ளது. நேபாளம் இந்தியாவின் ஆதிக்கத்தினின்று விடுதலை பெறுமென்றால் அது பூட்டானிலும் இந்திய மேலாதிக்கவாதிகளது அடக்கு முறைக்கு எதிராகப் போராடும் காஷ்மிரத்திலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று அஞ்சியே இந்தியா பூட்டான் மீது தனது இரும்புப் பிடியை மேலும் இறுக்கியுள்ளது. அதோடு பூட்டானின் சர்வாதிகார முடியாட்சி பூட்டானின் சிறுபான்மை நேபாளியர் மீது பிரயோகிக்கும் அடக்குமுறை, நிலப்பறி, வெளியேற்றல் போன்ற கொடுமைகளை எல்லாம் மௌனமாக அங்கீகரித்து வந்துள்ளது.

அண்மையில் அஸ்லாம் மாநிலத்தில் இந்திய மேலாதிக்கத்திற்கு எதிராக போராடி வரும் உல்பா (அஸ்ஸாமிய

11ம் பக்கம் பார்க்க

# செய்தி சிறிது விடயம் பெரிது

## மனிதாபிமான மிருகம்

ஆதர் கோஸ்ற்லர் ஒரு பெயர்பெற்ற முதலாளித்துவ ஜனநாயகவாதி. மாக்ஸிய விரோத மனிதாபிமானச் சிந்தனையாளர். கம்யூனிஸ விரோதிகள் சகலராலும் உற்சாகத்துடன் அவரது மனித சுதந்திரக் கருத்துக்கள் மேற்கோளாகக் கூறப்பட்டன. ஃபாஸிசமும் கம்யூனிஸமும் ஒன்றே தான் எனக் கூறுவோருக்கு ஒரு குருநாதர். தாய்நாடான ஒஸ்ற்றியாவை விட்டு பிரிட்டனில் குடியேறியவர். அவரது உருவச்சிலை ஸ்கொட்லாந்தின் எடின்பர பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருந்தது. அண்மையில் மாணவியர் பலரது கடுமையான எதிர்ப்பின் விளைவாக அச்சிலை அகற்றப்பட்டுவிட்டது.

மாணவியரது சினத்திற்கு காரணம் கோஸ்ற்லர் தொடராக பல பெண்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தி வன்கலவி (றேப்) செய்தவர் என்பதாகும். பிரித்தானிய இடதுசாரியான மைக்கல் ஃபுட்டின் மனைவியும் அவரது வக்கிரபுத்திக்குப் பலியான ஒருவர்.

இருப்பினும், இந்த இழிவான பிறவியின் இச்'சிறிய குறைபாடு' பற்றி பெரிது படுத்தக் கூடாது என்பதே பிரித்தானியத் தாராளவாதப் புத்தி சீவிகள் பலரது கருத்தாகும். ஒவ்வொரு மாக்ஸியவாதியினதும் சிறிய குற்றங்களை மிகைப்படுத்துவதோடு அபாண்டம் சுமத்துவதில் தயக்கங்காட்டாத இந்த அறிஞர்கள் கோஸ்ற்லர் பற்றிக் காட்டும் கருணை அவர்களது முதலாளிய சனநாயக மனிதாபிமானத்துக்கு நல்ல சான்று.

கோஸ்ற்லரின் கூற்றுக்களை இங்கே பஜனை போல ஒப்பித்த உள்ளூர் மாக்ஸிய எதிரிகட்கு மேற்படி தகவல் சமர்ப்பணம்.

## அமெரிக்க மத்தியஸ்தமா? அய்யோ வேண்டாம்!

கிழக்குச் சீனக் கடலில் உள்ள ஸ்பாட்லி தீவுகளின் மீதான ஆதிபத்தியம் தொடர்பாக சீனா, பிலிப்பின்ஸ், புறுணை, மலேசியா, வியற்னாம் ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்களும் தாய்வான் ஆட்சியாளர்களும் நீண்டகாலமாகச் சர்ச்சைப்பட்டு வருகின்றனர். இதைத் தீர்த்து வைப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் அண்மையில் மீண்டும் முன்வந்தது. முன்பு சீனா இதை வன்மையாக எதிர்த்தது. இப்போது மலேசியாவும் பிலிப்பின்ஸும் அமெரிக்கத் தலையீட்டை விரும்பவில்லை என அறிவித்துள்ளன. அமெரிக்காவின் செல்வாக்கு தொடர்ந்தும் நிலவுகிற பிலிப்பின்ஸின் இந்த நிலைப்பாடு அமெரிக்காவின் ஆதிக்க நோக்கங்கட்கு எதிரான உணர்வு வலுத்து வருவதையே காட்டுகிறது.

கிழக்காசியாவின் இன்றைய அரசியல், சமூக நெருக்கடிகட்கு முக்கிய காரணமே அமெரிக்கா தான் என்பதை இன்று அதன் பழைய நண்பர்களும் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

## அங்கேயும் அதே கதிதான்

தடையற்ற இறக்குமதி மூலம் அமெரிக்க உருக்குத் தொழில் பாதிக்கப்பட்டு பல தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா உருக்கு இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் ஆயிரக்கணக்கான உருக்குத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டஞ் செய்துள்ளனர். ரஷ்யா, ஜப்பான், பிறேசில் ஆகிய நாடுகளிலிருந்து மலிவான உருக்கு இறக்குமதிக்கு எதிராக அமெரிக்க நடவடிக்கை எடுத்தால் அது சுதந்திரமான வர்த்தகக் கொள்கைக்குப் பாதகமானது அதாவது தங்களது லாபத்துக்கு நல்லதல்ல என்று உருக்கு உற்பத்தியிற் தங்கியிராத மாநில அரசுகளின் அரசியல்வாதிகளும் முதலாளிகளும் கருதுகின்றனர்.

அமெரிக்காவுக்கு ஜப்பானிய இறக்குமதிகளைக் குறைப்பதற்கு ஜப்பான் உதவாவிட்டால் அமெரிக்கா பதில் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று ஜனவரி நடுப்பகுதியில் கிளின்ற்றன் மிரட்டிப் பேசியுள்ளார்.

இந்தத் தடையற்ற இறக்குமதிக் கொள்கையும் தாராளவாதமும் அமெரிக்க முதலாளிகளது நலன் சார்ந்து இயங்குகிற வரையும் தான் என்பது நாம் அறியாததா ஆயினும் அது அமெரிக்காவுக்கு உள்ளேயே பெரிய முரண்பாடுகளைக் கிளறிவிட்டுள்ளது.

அமெரிக்கா தூக்கிய பாறாங்கல் அதன் கால் மீது விழுந்திருக்கிறது.

## வடஅயர்லாந்து: ஆயுதப் பறிமுதலா, அரசியல் தீர்வா?

வட அயர்லாந்தின் அரசியல் தீர்வின் ஒரு பகுதியாக ஐ.ஆர்.ஏ. எனும் ஐரிஷ் விடுதலைப் படை யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டது ஆயினும் ஐ.ஆர்.ஏ. தன்னை நிராயுதபாணீயாக்கினால் ஒழிய ஷின் ஃபெய்ன் (ஐரிஷ் தேசியவாத இயக்கம்) ஆட்சியில் பங்குபற்ற முடியாது என்று பிரித்தானிய ஆட்சியாளர்களும் பிரித்தானிய விசுவாசிகளான புரட்டஸ்தாந்து மதவாதக் கட்சித் தலைமைகளும் நிபந்தனை விதிக்க முற்பட்டுள்ளன.

ஷின்ஃபெய்ன், புதிய ஆட்சியமைப்பில் பிரதிநிதித்துவ வலிமையின் அடிப்படையில் அல்லாது வேறேந்த அடிப்படையிலும் ஆட்சியிற் பங்குபற்றுவது பற்றி நிபந்தனை விதிக்க முடியாது என உறுதியாக உள்ளது.

முன்பு பலமுறை ஏய்க்கப்பட்ட கத்தோலிக்க மக்கள் ஐ.ஆர்.ஏயின் ஆயுதப் போராட்டத்தாலேயே இன்று இவ்வளவு தூரம் முன்னேறியுள்ளனர்.

ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களை கீழேபோடு முன்பு பிரித்தானிய கொலனி ஆக்கிரமிப்புப் படைகள் வட அயர்லாந்திலிருந்து வெளியேற வேண்டாமா? புரட்டஸ்தாந்து குண்டர்படைகள் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டாமா? கத்தோலிக்க விரோத வட அயர்லாந்து பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகள் சீரமைக்கப்பட வேண்டாமா?

பிரித்தானிய எசமானர்கள் வடஅயர்லாந்தின் பிரச்சினைகளின் தீர்வாகக் கருதுவது ஐ.ஆர்.ஏயின் கையில் உள்ள ஆயுதங்களைப் பறிப்பதை மட்டும் தானா என்ற கேள்வி நியாயமாக எழுகிறது.

ஷின்ஃபெய்ன் எடுத்திருக்கும் நிலைப்பாடு நியாயமானது. நியாயமான தீர்வு நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பே போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடமுடியும் என்ற பாடம் வரலாற்றில் பலமுறை நாம் வாசித்தது தானே.

நன்றி - நூலகத்திட்டம்



# அட்டனில் சிகப்புப் பேரணி

## இனவாதத்தை எதிர்த்து மக்கள் எழுச்சி

கடந்த 14-02-99 ஞாயிறு அன்று மு.ப. 10மணியளவில் அட்டன் நகரில் சிகப்புப் பேரணி ஒன்று இடம் பெற்றது. இனவாதத்தை எதிர்த்து, சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தை வற்புறுத்தி மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தியே பேரணியும் அதனைத் தொடர்ந்து எழுச்சிக் கூட்டமும் நடைபெற்றது.

புதிய இடதுசாரி முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பேரணியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இளைஞர்கள் யுவதிகள் மாணவர்கள் ஆசிரியர்கள் என்போர் கலந்து கொண்டனர். கொழும்பு குருநாகல் பிரதேசங்களில் இருந்து இருநூறுக்கு மேற்பட்ட சிங்கள முஸ்லீம் மக்களும் இப்பேரணியில் கலந்து கொண்டு இனவாதத்தை எதிர்த்து மக்களது ஐக்கியப்பட்ட போராட்டத்தை வற்புறுத்தினர்.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர்கள் தலைமை தாங்கி செம்பதாகையை எடுத்துச் செல்ல பேரணியில் கலந்து கொண்டோர் உணர்வு மிக்க முழக்கங்களை செங்கொடிகளை உயர்த்தி முழங்கினர். தோழர்கள் விக்கிரமபாகு கருணாரத்தின, சி.கா.செந்திவேல், பற்றிக் பெர்ணாண்டோ, இ.தம்பையா, லீனஸ் ஜயதிலக்கா, சோ.தேவராஜா, சிறிதுங்க ஜெயசூரியா ஆகியோர் தலைமை தாங்கிய பேரணி அட்டன் நகரின் பிரதான வீதிகளின் ஊடாக டன்பார் மைதானத்தை அடைந்தது. செங்கொடிகள், பதாகைகள், சுலோக அட்டைகள், தாங்கி பேரணியில் கலந்து கொண்டோர் எழுப்பிய கோரிக்கை முழக்கங்கள் நகரில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் கவனத்தை ஈர்த்தது. நகரில் உள்ள ஒருவர் கூறினார். 'முப்பது வருடங்களுக்கு பின்னால் அட்டன் நகரில் செங்கொடிகள் தாங்கிய இப்பேரணியைப் பார்க்கும் போது சண்முகதாசன் காலத்து செங்கொடிச்சங்க எழுச்சிக் காலம் நினைவுக்கு வருகிறது' என்று கூறினார். அந்தளவுக்குப் பேரணி உணர்வும் ஆக்கிரோசம் மிக்கதாகவும் அமைந்திருந்தது. 'மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்போம். 'இனவாதத்தை முறியடிப்போம்.' 'சிங்கள தமிழ் முஸ்லீம் ஐக்கியத்தை கட்டி வளர்ப்போம்.' 'யுத்தம் வேண்டாம் அரசியல் தீர்வு வேண்டும்! புதிய இடதுசாரி முன்னணி வாழ்க! 'உலக வங்கி நமக்கு வேண்டாம் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறை போன்ற முழக்கங்களைப் பேரணி முழக்கிச் சென்றது.

பகல் 12மணியளவில் டன்பார் மைதானத்தில் எழுச்சிக் கூட்டம் புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா தலைமையில் நடைபெற்றது. அவர் தனது உரையில், மலையக மக்களாகிய எமக்கு முன்னால் மாபெரும் வரலாற்றுப் பணி காத்து நிற்கிறது. அன்று நடேசய்யர் தொடங்கிய தொழிற்சங்க அரசியல் பணியானது இனவாத தொழிற் சங்கவாதியான ஏ.ச.குணசிங்கா வினால் துரோகம் செய்யப்பட்டது. இருந்தும் நடேசய்யர் சுயநலம் இன்றி தன் பணி ஆற்றினார். அவரது நேர்மையான பணியைத் தொடர பின் வந்த தலைவர்களின் பதவி ஆசைகள் தடுத்து விட்டன. அறுபதுகளில் தோழர் சண்முகதாசன் மலையகத்தில் முன்னெடுத்த புரட்சிகரமான அரசியல் பணியை அவருடன் இருந்த மலையகத் தலைவர்கள் எனப்படுவோர் துரோகம் செய்து குட்டிச் சுவராக்கிவிட்டனர். அவ்வாறு விட்டுச் சென்ற இடைவெளியை நிரப்பி புரட்சிகர வெகுஜன அரசியல் மார்க்கத்தையே மலையகத்தில் புதிய ஜனநாயக கட்சி முன்னெடுத்து வருகின்றது. சுயநல சந்தர்ப்பவாத மலையக தொழிற் சங்கத் தலைமைகளை நிராகரித்து புதிய கூட்டுத்தலைமையுடைய மாக்சிச லெனினிசத் தலைமைத் துவத்தையும் போராட்ட இயக்கங்களையும் கட்டியெழுப்பி முன் செல்வதே வரலாறு நம்மிடம் விட்டுள்ள அரசியல் பணியாகும் என்று கூறினார்.

மேலும் தோழர் விக்கிரமபாகு கருணாரத்தின உரையாற்றுகையில் ஒரு குடும்பத்தில் உண்மையான சமத்துவம் நிலவாத சூழலில் அக்குடும்பத்தில் பிளவுகளும் பிரச்சினைகளும் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. அது இறுதியில் பிரிவினையாகவும் நடந்தேறி விடவே செய்யும். மலையக மக்கள் தமது அடிப்படை உரிமைகளை இழந்து சமத்துவமற்று வாழும் நிலை தொடருமானால் அவர்கள் மலைநாடு என்று ஒன்றைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படலாம். அச் சூழலில் புதிய இடதுசாரி முன்னணி அக் கோரிக்கையை கையேற்க வேண்டிய நிலை கூட ஏற்படலாம். அவ்வாறான நிலை தோன்றுவதற்கு முன் அவர்களது அடிப்படை உரிமைகள் வழங்கப்படல் வேண்டும் என்பதே நமது கோரிக்கையாகும் என்றார்.

புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் உரையாற்றுகையில் இன்றைய பேரணியும் எழுச்சிக் கூட்டமும் தொழிற்சங்க சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாட்டில் நின்று பதவிக்கு வரும் அரசாங்கங்களுக்கு கால் பிடித்து கைபிடித்து சேவகம் செய்து வரும் தலைமைகளுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. மலையகத்தின் புதிய தலைமுறை மினர் எடுத்துள்ள புரட்சிகர வெகுஜன அரசியல் பாதையின் மற்றொரு அடியெடுத்தலைக் காட்டி நிற்கிறது என்று கூறினார். மற்றும் தோழர்கள் பற்றிக் பெர்ணாண்டோ, லீனஸ் ஜெயதிலக்கா, சோ. தேவராஜா, சிறிதுங்க ஜெயசூரியா, எஸ்.இராஜேந்திரன், கே.சுப்பிரமணியம் உட்படப் பலர் உரையாற்றினர்.



கடந்த 14-02-99 அன்று அட்டனில் புதிய இடதுசாரி முன்னணி நடாத்திய பேரணிக்கு அம் முன்னணியின் தலைவர்கள் விக்கிரமபாகு கருணாரத்தின இ.தம்பையா, சிறிதுங்க ஜயசூரியா, சி.கா.செந்திவேல் தலைமை தாங்கிச் செல்கின்றனர்.

# இராணுவம் ஒருபுறம் இயக்கங்கள் மறுபுறம்

## கொடுவதைகளுக்குள் மக்கள்

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு நீண்ட பின்னடிப்புக்குப் பின் அரசாங்கம் இணங்கியுள்ளது. அரசாங்கத்தை இம் முடிவுக்கு கொண்டுவர மக்கள் மத்தியில் இருந்து பல்வேறு நிலைகளிலே பாரிய அழுத்தங்களும் வற்புறுத்தல்களும் செய்யப்பட்டன. பல்வேறு அரசியல் சமூக மனித நேயஅமைப்புகள் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளன. குறிப்பாக தமது பிள்ளைகள், கணவன்மார், தந்தையர், சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்களை இழந்த மக்களின் இடையிறாத கண்ணீர் பெருக்குடனான நடவடிக்கை களுக்கு அரசாங்கம் பதில் கூற வேண்டிய நிலையிலேயே புதைகுழிகளைத் திறக்க சட்டபூர்வ நடவடிக்கையில் இறங்கியுள்ளது. நடந்து முடிந்த கொடுவதை ஒன்றிற்கான நீதி கோரிய மக்கள் அடுத்த கட்டத்தை எதிர் நோக்கி நிற்கின்றனர்.

அதே வேளை அண்மைய காலங்களில் வடக்கிலும் கிழக்கிலும் ஆட்கள் காணாமல் போவது அதிகரித்துக் காணப்படுகிறது. அத்துடன் கொல்லப்படுவதும் காயங்களுக்கு ஆளாவதும் தினம் தினம் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக குடா நாட்டில் தினச் சம்பவங்கள் தொடர்கின்றன. இனம் காட்டாத கொலைகள் அங்கு மர்மமாக நடைபெறுகின்றன. வீடுகளில் வேலைத் தலங்களில் இருந்து இளைஞர்கள் காணமல் போகிறார்கள். ஓரிரு நாட்களின் பின் வீதி ஓரங்களில் பிணமாகக் கிடக்கும் சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்று வருகின்றன. இவை பற்றிய முறைப்பாட்டு விபரத்தை தேசிய மனித உரிமை கழக யாழ் காரியாலயத்திலிருந்து வெளியிடப் படும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் பன்னிரண்டு வயதுச் சிறுவன் படையினரால் கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டு கிணற்றில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்ட செய்தி வெளி வந்தது. அதேபோன்று பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்ற வண்ணமே உள்ளன.

இவ்வாறு படைத்தரப்புத் தாக்குதல், கொல்லுதல், காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெற மறுபுறத்தில் இயக்கங்களின் வதை முயற்சிகள் இரகசியமாகவும் பகிரங்கமாகவும் தொடர்கின்றன. புலிகள் இயக்கம் குடா நாட்டு நிர்வாகத்தைக் குழப்பவும் தமது பலத்தை அதிகரிக்கவும் தாக்குதல்களில் ஈடுபடுகிறார்கள். தமது நடவடிக்கைகளால் மக்கள் எந்தளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பது பற்றி அவர்களுக்கு அக்கறை கிடையாது. அதே வேளை புலிகளைப் பிடிக்கிறோம் அழிக்கிறோம் எனக் கூறிக்கொண்டு படையினர் ஒருபுறமாகவும் இயக்கங்கள் மறுபுறமாகவும் செயல் புரிகிறார்கள். இதனால் ஒன்று மறியாத பல இளைஞர்கள் யுவதிகள் சந்தேகம் என்னும் பெயரில் கைது செய்யப்படுவதும் நடைபெறுகின்றன. ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்துள்ளவர்கள் எனப்படும் இயக்கங்கள் மக்களை பலவழிகளாலும் துன்பங்களுக்கு ஆளாக்கி அல்லற் படுத்துகின்றனர். வரி, உதவி, ஊழியம், விசாரணை, விளக்கம் எனக் கூறி தடுத்து வைத்தல், தண்டனை வழங்குதல், சித்திரவதை செய்தல் போன்றவற்றைத் தாராளமாகச் செய்து வருகின்றனர். இவற்றைச் செய்து கொள்வதில் ஏற்பட்ட போட்டியால் தங்களுக்குள் மோதிக்கொண்டும் உள்ளனர். அண்மைய வவுனியா மோதல்களைக் கண்டு அரசாங்கம், பேரினவாதிகள், படைத்தரப்பினர் குதூகலப்பட்டுக் கொண்டனர். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு இலாபம்தானே. எந்த மக்களின் விடுதலைக்கு எனப்புறப்பட்டார்களோ அந்த மக்களின் விமோசனத்திற்கான சரியான இடத்திற்கு வந்து சேர வேண்டியது சகல இயக்கங்களினதும் கடமையாகும். ஆயுதங்களை முதன்மைப்படுத்தாது அரசியல் கொள்கை நிலைப்பாட்டை முதன்மையாகக் கொண்ட இடம் ஒன்றிற்கு எல்லோரும் வரவேண்டும். அல்லாதுவிடின் ஆளும் பேரினவாத சக்திகளுக்கே உதவி செய்வோராவர்.

# பிரபஞ்ச வாழ்த்து

1. ஆனா முதலாம் எழுத்தெல்லாம் உலகில்
   அனைவருக்கும் ஒன்றென்றே கொள்.
2. படிப்பதானால் பெற்ற பயனென்ன பொதுமக்கள்
   துடிப்பினைத்தாம் காணார் எனின்.
3. பிரபஞ்ச உலகின் விதிகளைப் புரிந்தோர்
   நிரந்தரமாய் வாழ்வார் நிமிர்ந்து.
4. சுற்றுச்சூழலுடன் சேர்ந்து உடன் வாழ்ந்தார்க்கு
   சற்றும் கவலை இல.
5. இன்பமும் துன்பமும் நன்மையே வாழ்வினில்
   எந்நாளும் ஒன்று படின்.
6. ஐம்பொறியின் அனுபத்தால் கற்றுணர்ந்து வாழ்வாரே
   தம்ஒழுங்கில் நிற்பர் சிறந்து.
7. பொது வாழ்வுடையரோடு பழகினார்க்கு அல்லால்
   எதுதுன்பமெனில் வெல்லல் அரிது.
8. பொதுவுடமைப் படையினர்பால் பயின்றாருக்கல்லால்
   எதிர்ப்பினிடை வாழ்தல் அரிது.
9. அறியாமைப் பண்பு அமையாதே வறியாரின்
   நெறிதான் தெரியப் பெறின்
10. வாழ்க்கையின் இன்பத்துள் மகிழ்வர் மகிழாரே
    சூழ்ந்தொழுகி வாழப்பெறார்.

– பொய்யா மொழியன் –

### அடுத்தது பூட்டான்.......

ஐக்கிய விடுதலை முன்னணி) எனும் இயக்கத்தின் மீதும் போடோலாந்து ஜனநாயக விடுதலை முன்னணி (எஸ்.டி.எவ்.பி.) என்ற பூர்வ குடிகளது சுயாட்சி இயக்கத்தின் மீதும் தாக்குதல் தொடுப்பதற்கு உதவுமாறு பூட்டானிய ஆட்சியாளர்கள் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளனர். டிசெம்பர் மாதத்தில் அஸ்ஸாமுக்குள் ஊடுருவிய பூட்டானியப் படையினர் மூவர் பர்பேட்டா மாவட்டத்தில் போடோ போராளிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்திய–பூட்டான் எல்லைக் காடுகளைத் தளமாகக் கொண்டு போடோ போராளிகள் செயற் படுகின்றனர். இந்தியாவுடனான உடன்பாடு பூட்டானிய சர்வாதிகார ஆட்சியின் உள்நாட்டு நெருக்கடிகட்கும் மேலாகப் புதிய நெருக்கடிகட்கே காரணமாகும். இதன் தொடர்விளைவாக பூட்டான் அரசு இந்தியாவின் ஆதரவிலேயே முற்றாகத் தங்கியிருக்கும் நிலைமை உருவாகும்.

இந்தியாவின் மேலாதிக்கக் கொள்கைகளைப் பொறுத்தளவில் இந்தியாவின் இரண்டு பெரிய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் எசமானவர்க்கத்தின் கட்சிகளுக்கும் அதிகம் வேறுபாடு இல்லை.

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது
PUTHIYA POOMI | පුදියපූමි
சுற்று 06 பெப்ரவரி 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 26

## நாங்களும் அவர்களும்

### மூன்றாம் உலக நாடுகளில்

- ✤ மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகளை வழங்க வருடாந்தம் 13 பில்லியன் அ.டொலர்களைப் பெற மேற்படி நாடுகள் அவதிப்படுகின்றன.
- ✤ பெண்களின் மகப்பேற்று சுகாதார சேவைகளை வழங்க வருடாந்தம் 12 பில்லியன் அ.டொலர்களைப் பெற முடியாது இந்நாடுகள் கஷ்டப்படுகின்றன.
- ✤ சுத்தமான குடிநீர் வழங்கவும் கழிவகற்றல் தேவைக்கும் வருடாந்தம் 11 பில்லியன் அ.டொலர்களைப்பெற முடியாது இந்நாடுகள் திண்டாடுகின்றன.

### அமெரிக்க – ஐரோப்பிய நாடுகளில்

- ✤ தமது செல்லப் பிராணிகளான நாய் பூனை போன்ற வற்றின் உணவுக்காக வருடாந்தம் 17 பில்லியன் அ.டொலர்களை இந்நாடுகள் செலவு செய்கின்றன.
- ✤ தமது உடல்களில் சுகந்தமான மணம் வீசச் செய்வதற்காக நறுமணத் தைலங்கள்-திராவங்களுக்காக வருடாந்தம் 12 பில்லியன் அ.டொலர்களை இந்நாடுகள் செலவு செய்கின்றன.
- ✤ ஐரோப்பியர்கள் மட்டும் வருடாந்தம் 11 பில்லியன் அ.டொலர்களுக்கு ஐஸ்கிறீம் சாப்பிடுவதற்காகச் செலவு செய்கின்றனர்.

# நாசகார யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் சமாதானக் கோரிக்கை வலுவடைகிறது

அரசாங்கமும் யுத்த வெறியர்களும் பேரினவாதிகளும் எவ்வளவிற்கு யுத்தத்தை நியாயப்படுத்தினாலும் நாட்டின் பெரும்பான்மையான எண்ணிக்கை கொண்ட மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. 'நாட்டைப் பாதுகாக்கும் புனித யுத்தம்' 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' 'சமாதானத்திற்கான யுத்தம்' 'புலிகளை அழித்தொழிக்கும் போர்' என்ற முழக்கங்கள் யாவும் அரசியல் உள்நோக்கங்கள் கொண்ட முழக்கங்கள் என்பதை மக்கள் இன்று உணர ஆரம்பித்து விட்டார்கள். அத்துடன் அரசியல் தீர்வுப் பொதி வென்தாமரை இயக்கம் போன்றவற்றின் வெற்று டப்பா பிரச்சாரங்களின் ஏமாற்றுக்களையும் நடைமுறையில் மக்கள் கண்டுள்ளனர்.

யுத்தம் வடக்கு கிழக்கை பாதித்து நாசப்படுத்தியுள்ளதுடன் நாடு முழுவதையும் ஊடுருவித் தாக்கி நிற்கிறது. எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் யுத்தம் என்ற எண்ணம் சில ஆண்டுகளுக்கு முன்பு சிங்கள மக்கள் சிலரிடம் காணப்பட்டது. ஆனால் இன்றோ யுத்தம் நாட்டின் ஒவ்வொருவரின் வீட்டிற்குள்ளும் வந்து நிற்கிறது. யுத்தத்தின் பீரங்கித் தீனியாக நிறுத்துவதற்கு ஒவ்வொரு சாதாரண சிங்கள தொழிலாளி விவசாயினது பிள்ளைகளையும் இழுத்துச் செல்லும் நிலை தோன்றி உள்ளது. இளைஞனாக யுவதிகளாக தமது வறுமையைப் போக்கப் போர் முனைக்குச் சென்றவர்கள் பிணமாக வருகிறார்கள். பலரைக் காணவில்லை. ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியாது பெற்றோர் குமுறிக் தவிக்கிறார்கள்.

இவை ஒரு புறம் தொடர மறுபுறத்தில் நாட்டின் பொருளாதாரம் யுத்தத்தால் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. சென்ற வருடத்தில் யுத்தத்திற்கு என ஆறாயிரம் கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளது. இந்த வருடம் அத்தொகை அதிகரிக்கப் படும் நிலை காணப்படுகிறது. கோடிக் கணக்கில் யுத்த தளபாடங்கள் நவீன ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கப்படுகின்றன. இவற்றுக்குரிய பணம் எங்கிருந்து கிடைக்கிறது. ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், வெளிநாட்டு அமைச்சர் அல்லது யுத்தத்தை விரிவாக்கும்படி கேட்கும் யுத்த வெறியர்கள் என்போரின் உழைப்புப் பணம் அல்ல. அவர்களது பாட்டன் பூட்டன் அப்பன் வீட்டுச் சொத்துக்களை விற்று யுத்தத்திற்கு செலவிடவில்லை. இந்நாட்டு மக்களிடமிருந்து உறக்கப்படும் பணமே ஆகும். நேர்முக மறைமுக வரிகளால் பணம் பெறப் படுகிறது. போதாதென்று பாதுகாப்பு வரி, பொருட்கள் சேவைகள் வரி என வசூலிக்கப்படுகிறது. இதன் காரணமாக மக்களது வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளன. அரிசி சீனி மாவு உட்பட அன்றாட பாவனைப் பொருட்கள் வானத்தை நோக்கிய விலை அதிகரிப்புகளாக உயர்ந்துள்ளன. இத்தகைய விலை அதிகரிப்புகளுக்கும் யுத்தத்திற்கும் சம்மந்தமில்லை என எந்த முட்டாளும் சொல்ல மாட்டான். இவை மட்டுமின்றி யுத்தம் நாடு முழுவதிலும் வன்முறை வக்கிர எண்ணங்களையும் கொலை வெறிச் செயல்களையும் வளர்த்திருக்கின்றன. அதற்குத் தகுந்தாற் போல் நவீன ஆயுதங்களையும் அவற்றைக் கையாளக் கூடிய பாதாள உலகம் என அழைக்கப்படும் கும்பல் களையும் வளர்த்துள்ளன.

இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து யுத்தத்தின் விளைவுகள் எத்தகைய பயங்கர சூழலைத் தோற்றுவித்துள்ளன என்பதை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். இதன் வெளிப்பாடாக நேர்மையான இடதுசாரி சக்திகள், சமூக அக்கறையாளர்கள். மதத் தலைவர்கள் யுத்தத்தை எதிர்த்தும் சமாதானத்தை முன்னிறுத்தியும் தத்தமது முயற்சிகளை முனைப்பாக்கி வருகின்றனர். அரசியல் முனையில் புதிய இடதுசாரி முன்னணியினர் ஏற்கனவே யுத்த எதிர்ப்பு பிரசாரத்தை நாட்டில் பல பகுதிகளிலும் முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் புலிகள் இயக்கத்திற்கு ஏற்கனவே பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதற்கான கடிதத்தையும் அனுப்பியிருந்தனர்.

மேற்படி முயற்சியைத் தொடர்ந்தே சமாதானத்திற்கான தேசிய கூட்டமைப்பை உருவாக்கப் பட்டது. சமூக அக்கறை மிகுந்த அறிவுஜிவிகள் பலர் இதில் முன்னின்றனர். தற்போது இத்தகைய முயற்சிகள் மேலும் விரிவடைந்த நிலையில் மதத்தலைவர்களும் சமூக அக்கறையாளர்களுமான ஒரு தூதுக் குழுவினர் அண்மையில் வன்னிக்குச் சென்று அங்காங்குள்ள மக்களின் துன்பதுயரங்களை நேரில் கண்டறிந்துள்ளதுடன் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியும் உள்ளனர். அத்தூதுக் குழுவினர் கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் வன்னியில் தாம் கண்ட காட்சிகளையும் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றியும் எடுத்துக் கூறி உள்ளனர். இது தென்னிலங்கை மக்கள் மத்தியில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது இம் மாதம் 26ம் திகதி சமாதானத் திற்கான ஒரு பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் சமாதானத் திற்கான தேசிய கூட்டமைப்பு நடாத்த உள்ளது.


இவையாவும் யுத்தத்திற்கு எதிரான மக்களின் சமாதானத்திற்கான அபிலாஷைகளைப் பிரதிபலிப் பனவாகவே காணப்படுகின்றன. அண்மையில் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் நடாத்திய ஆய்வில் வடக்கு கிழக்குத் தவிர்ந்த பிரதேசங்களில் வாழும் அனைத்து மக்களில் 77 வீதமானவர்கள் யுத்தத்தின் மூலம் பிரச்சினை தீர்க்க முடியாது எனக் கூறியுள்ளதாகக் கூறுகிறார். அதேபோன்று 85 வீதமான இளைஞர்கள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து சமாதானத்தை நிலைநிறுத்துவதை விரும்புகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டடுள்ளது.

இந்நிலையில் யுத்தத்தை ஆளும் வர்க்க அரசியல் சக்திகள், ராணுவ யுத்தவாதிகள், பேரினவாத வெறி யர்கள், வெளிநாட்டு தீயசக்திகள் போன்றோரே விரும்புகிறார்கள். இத்தகைய சமாதானத்தின் விரோதிகளை மக்கள் நிராகரித்து ஒதுக்கித் தள்ளும் புதிய சூழல்கள் உருவாகி வருவதனை அவதானிக்க முடிகிறது. எனவே யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் நியாயமான அரசியல் தீர்வு காணப்படுவதையும் அதன் மூலம் சமாதானமும் இயல்பு வாழ்க்கையும் தோன்றுவதை சகல மனித நேய சக்திகளும் வற்புறுத்தி நிற்பது இன்றைய அவசியத் தேவையாகும்.


## தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் அரசியல் மார்க்கத்தை வலுப்படுத்த புதிய இடதுசாரி முன்னணிக்கு வாக்களியுங்கள்!




மேல் மாகாணம்
கொழும்பு மாவட்ட பிரதான வேட்பாளர்
தோழர். சோ. தேவராஜா



46

## மலையக மக்களின் இன, வர்க்க உரிமைகளை வெகுஜனப் போராட்ட பாதையில் வென்றெடுக்க புதிய இடதுசாரி முன்னணிக்கு வாக்களியுங்கள்!



மத்திய மாகாணம்
நுவரெலியா மாவட்ட முதன்மை வேட்பாளர்
தோழர். இ. தம்பையா



3

புதிய ஜனநாயக கட்சி மத்திய குழு


வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகேபிரஸ் 26/1, சிவானந்த வீதி, கொழும்பு 13.